போன் நெ. 15. விலை 2 அணா. REGD. NO. 4642

திராவிடநாடு

மலர் 12 | 9—8—53 | இதழ் 6

நரியின் நர்த்தனம்!

[அரங்கண்ணால்]

நீ,

சுதந்திர ஒளியை ஏந்தியிருக்கும் தூதன்,

அடிமைச் சங்கிலியை அறுத்தெறிந்த மாவீரன்,

ஏழைகளின் கண்ணீரைத் துடைத்து இன்பம் தரக்கூடியவன்.

உன்,

உள்ளத்தில், ஏழை-பணக்காரன் முடிசூடி - வீதி. சுற்றுவோன், மட குரு-பக்தன்; எல்லோருக்கும் சம இடம்தான்.

மனிதர்களின் கோயில், நீ!

அணிமணிகளணிந்தோர் உன்னை அடிமைகொண்டிட முடியாது.

ஆர்ப்பரிக்கும் அரசர்களை வென்றவன், நீ.

நல்லோரது தியாகத்தில், சிறப்புப் பெறுவாய்—

தீயோரது பிடிகளில் நீண்டநாள் சிக்கிக் கிடக்கமாட்டாய்—

நீ, வெற்றி வீரன்! விடுதலைத் தூதன்! மக்களின் இதயம்!

மின்னும் பொன், நீ! உன்மீது மாசு தூவமுனைவோர், மரக்கட்டைகளாவர்!!

*

'ஜனநாயகம்' எனும் தலைப்பில், விட்டியர் எனும் அமெரிக்கக் கவி, இவ்வண்ணம் தீட்டியிருக்கிறான், ஒரு கவிதையை.

தண்டு தூக்கியவனெல்லாம் மக்களையாளும் தகுதி பெற்றவன் என்றிருந்த நிலையை மாற்றி, மாவீரனானாலும், மண்டலங்களையெல்லாம் ஆளும் மகாசக்கரவர்த்தியானாலும் தன்னுடைய சந்நிதானத்தின் முன்னின்று, பதிலுரைக்கவேண்டும் என்கிற உயரிய நியதியை, உலகுக்கு அளித்த ஒரு சொல், 'ஜனநாயகம்'

உருட்டு விழி, முரட்டுக் குரல்—மக்களையாண்ட காலம் ஒன்றிருந்தது.

மகாகுரு!—எனும் திரைக்குள், நாடு ஆளப்பட்ட காலமும் இருந்தது.

ஆண்டவனின் தூதன்—இந்த முக மூடியுடன், மக்கள் மன்றம் வதைக்கப்பட்ட காலமும் உண்டு.

இந்தக் 'கெட்ட காலத்தை', விரட்டி, மக்களின் குரலுக்கு, மகத்தான சக்தியை, 'ஜனநாயகம்' தேடித் தந்தது.

அரசபீடத்திலே அமர, அரசனின் மகனுக்கே உரிமையுண்டு என்கிற நிலை மாறி, வாழ்க்கை வசதியும் 'பிரபு'ப் பட்டமும் பெற்றவரே அரசாங்கத்தை நடத்த அருகதை பெற்றோர் எனும் திட்டம் அகற்றப்பட்டு, 'மக்களே மன்னர்கள்!' எனும் புது உரையை, மனித உலகுக்குக் கொண்டுவந்தது இந்தச் சொல்.

இதனாலேயே, ஜனநாயகம் எனும் பெயர்பெற்றது.

மக்கள் அரசு!—ஆகா, எவ்வளவு இனிமையாயிருக்கிறது, கேட்க.

இந்த இனிமையைக் குறித்து கவிவாணர்கள் பலர், தீட்டினர்—அரசியல் அறிஞர்கள் நூல்களாக எழுதிக் குவித்தனர்—பொது வாழ்க்கையில் புரள்வோர், பொன்னெனப் போற்றினர்.

மக்கள் அரசு! — பொலிவு பெறலாயிற்று.

ஜனநாயகம்! — இருண்டு கிடந்த குகைக்குள், ஒளி விளக்கைக் கொண்டுவந்த தூதன், என்று போற்றப்பட்டது.

அரசர்கள்—மதகுருக்கள் — பிரபுக்கள், என்றிருந்த நிலை மாறி, அரசாங்கத்தின் ஆட்சிக் கோலை, மக்கள் மன்றத்துக்கு வழங்கிய, இப் புது முறை கண்டு, போற்றியது, உலகம்.

முடிகள், கவிழ்ந்தன! உருட்டு விழிகள், மிரண்டன! உரத்த குரல், வலிவை அடக்கிக்கொண்டது! மனிதன் பயமின்றி வாழ ஆரம்பித்தான். 'அரசுக்கு மக்கள் அடிமை' என்ற நிலை மாறி, 'மக்களுக்கு அரசு அடிமை' எனும் மகோன்னதமான கொள்கை, பரவலாயிற்று.

நல்லோர், உளம் களித்தனர் — பொல்லாதோரும், எதுவும் கூற வழியின்றி, ஒப்புக்கொண்டனர்.

"வலியோர் சிலர், எளியோர் தமை, வதையே புரிகுவதா? மகராசர்கள் உலகாளுதல் நிலையாம் எனும் நினைவா?" — என்று கவிவாணர்கள் கண்களிலே பிறந்த அக்கினிச் சுடர்கள், 'ஜனநாயகம்' எனும் சொல் கேட்டதும் அடங்கின.

மக்கள் அரசு! மக்கள் அரசு!!— என்று.. புளகாங்கிதமடைந்தது, அடிமைப்பட்டுக் கிடந்த உலகம்.

இந்த மகிழ்ச்சியை உலகுக்குத் தேடித்தர, மக்கள் அரசின் மாண்பினை உணர்த்த, சிந்தப்பட்ட இரத்தத் துளிகள், ஏராளம்! தியாகம் செய்த மாவீரர்கள் பட்டியல், மிகப் பெரிது! இரத்த ஆறுகளைத் தாண்டி—மன்னர்களின் கர்ஜனைகளையும்—மத குருமார்களின் வார்த்தை அஸ்திரங்களையும்—பிரபுக்களின் தாக்குதலையும் வீழ்த்திவிட்டு, 'ஜனநாயகம்' மெருகுபெற்ற வரலாறு—மிக மிகப் பெரியது.

தியாகத் தீயிலே பிறந்த சொத்து அது!

அதனைத்தான், நமது மாநில அமைச்சர், ஆச்சாரியார் அவமதிக்கிறார்.

ஜனநாயகம் பேசியபடி, ஆட்சி அதிகாரம் பெற்றபின், அதன்மீது மாசு தூவ முனைந்தோரும் உண்டு.

தியாகத் தீயிலே பிறந்த சொத்தைத் தமது சுயநல மாசுக்கு இரையாக்கிட முனைந்த எத்தர்கள் — பலப் பலர்.

அவர்களனைவரும், கவிஞர் விட்டியர் கூறுவதுபோல மரக்கட்டைகளாகத்தான் ஆயினரே தவிர, மனிதர்களாகவே கருதப்படவில்லை.

மூச்சையடக்கி எடுக்கும்முத்தை, தன்னுடைய மோகனுவுக்காகப் பயன்படுத்தும் முத்தையாக்கள் இருப்பதுபோல், இரத்தம் சிந்திக் காணப்பெற்ற ஜனநாயகத்தை தம்முடைய சர்வாதிகாரத் தாகத்துக்குப் பயன்படுத்திக்கொண்டனர், ஹிட்லர் போன்றோர்.

'ஹிட்லர்களின்,' வரலாறுகளை, ஆச்சாரியார், நன்கறிவார். ஜனநாயகம் — எனும் சொல், சுமந்து வைத்திருக்கும் சரித்ர நிகழ்ச்சிகளும், நன்றாகத்தெரியும் அவருக்கு.

எனினும், தியாகத் தீயிலே கிடைத்த சொத்தைப் புழுதியிலே வீசியெறிகிறார்! மக்கள் அரசு — இட்ட, கட்டளையை மதியாமல் நடந்துகொள்கிறார்! பல்லாயிரக் கணக்கான மக்கள் தேர்ந்தெடுத்து அனுப்பிய எம். எல். ஏ.க்கள் எல்லாம் சேர்ந்து செய்த முடிவை மதியாமல் நடந்துகொள்கிறார்! ஆச்சாரியார் கொண்டுவந்த கல்வி முறையை நிறுத்திவைக்குமாறு, ஜனநாயகம், உத்தரவிட்டது. உத்தரவை நிறைவேற்றவில்லை! உரத்த குரலில் விளக்கங்கள் தருகிறார்!!

உரத்த குரல்! உருட்டுவிழி!! — இவைகளை வீழ்த்திவிட்டு உருவாக்கப்பட்டதுதான், மக்கள் அரசு.

அதனை, அவமதிக்கிறார்.

சட்டசபை கட்டளை இட்டது.

கட்டளையை நிறைவேற்ற வேண்டும் அல்லது ஆட்சிப் பொறுப்பிலிருந்து விலகிவிடவேண்டும்.

எதுவும் செய்யவில்லை! 'இவர்கள் யார்?' — என்று கேட்கிறார். மக்களின் பிரதிநிதிகளைப் பார்த்து, மக்களின் பிரதிநிதியில்லாத ஆச்சாரியார் கேட்கிறார், 'இவர்கள் யார்?' என்று.

ஜனநாயக யுகத்தில், கண்டிராத காட்சி! காண்கிறோம் இங்கே!!

*

"இவர்கள் யார்?"—அப்சரஸ்கள் சூடிக்கிடக்க, அம்சதூளிகா மஞ்சத்திலிருந்தபடி, ஒரு கை மதுக்குடத்திலும், மற்றோர் கரம் மாதரின் தோளிலும் கிடக்க, மமதை ஒரு பக்கமும், போதை மற்றோர் பக்கமும் இடிக்க, சூழ்ந்துவந்தமக்களின் பிரதிநிதிகளைப் பார்த்து, யார் இவர்கள்? எனும் கேள்வியை வீசிடும், ராஜாதிராஜனல்ல, ஆச்சாரியார்! பெயர்தான் 'ராஜ' என்றிருக்கிறதே தவிர, அவர் ராஜனுமல்ல; அவருக்கென ஒரு ராஜ்யமும் கிடையாது.

ராஜ்யம்! ரசாயனம்!! — உருட்டு விழி! மிரட்டும் குரல்!!—'இத்யாதி'களைப்பெற்றோருடன் வாழ்ந்த, சைலாம் இதோ! ஜனநாயகத் சட்டசபை அவரைக் கட்டுப்படுத்தி வைத்துள்ளது! "அவருடைய காருக்கு 'நம்பர் பிளேட்' போடாமலிருப்பதேன்? அவரும் சாதாரண மனிதன்தானே —அவருக்கேன் தனிச் சலுகை?" என்று, அவர் ஆண்ட ஐதராபாத் சமஸ்தானக் கோர்ட்டிலே வழக்குத் தொடர்ந்துள்ளார், ஒரு சாதாரணப் பிரஜை. சைலாம் இல்லை, இது! அரசமுடி அழகும், அதிகாரவலமும் ஏந்தி, பவனி வந்த திருவாங்கூர் மன்னர்—அங்கும் சட்டசபை! மைசூரில் — காஷ்மீரத்தில் — ரஜபுதனத்தில், எங்கெங்கு ராஜாக்களும், மன்னர்களும் இருந்தார்களோ, அங்கெல்லாம். சட்டசபைகள் சட்டம் தீட்டுகின்றன. அவர்களின், சுகபோகம், உல்லாச உத்தரவுகள், இன்று காண முடியாது. தட்டி நடந்தால், சட்டசபை கொட்டும்! நடவடிக்கை எடுக்கும்!

இது, 'ராஜாக்களின்' நிலை— ஆனால், நம்ம 'ராஜாஜி' யோ, தம்மை ஒரு அரசராக நினைக்கிறார்.

பழைய பாதையில், புகுகிறார் 'இவர்கள் யார்?'—என்று கேட்கிறார்.

மன்னாதி மன்னர்களின் மணிமகுடங்களை வீழ்த்தி விட்டது — ஜனநாயக முறை.

இந்த 'சக்கரவர்த்தியோ,' இப்போதுதான் மணிமுடியணிந்தோர் குரலில், மார் தட்டிக் கிளப்புகிறார்

யார், இவர்களாம்! — எவ்வளவு துணிவு, இருக்க வேண்டும், இந்தக் கேள்வியைக் கேட்க. இங்கிலாந்தில் கேட்க முடியாது—பிரெஞ்சு பூமியில் 'சுட்டு' விடுவார்கள் — ஜனநாயகம் பேசப்படும் எங்கும் அடுத்த வினாடியே அகற்றப் பட்டுவிடுவார்கள், அரசாங்க பீடத்திலிருந்து. ஆனால் இவர் மட்டும், வீற்றிருக்கிறார்! இங்கு மட்டும் இந்தக் காட்சியைக் காண முடிகிறது!!

"இவர்கள் செய்த சிபாரிசை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதில்லை!!"—இவ்வண்ணம், விளக்கம் தருகிறாரே, ஆச்சாரியார்

இவர் யார்? — விளக்கம், வேண்டும், நமக்கு. வெற்றிக் குடை பிடிக்கும் வேந்தன் அல்ல, ஏதோ பழைய 'போதை'யில், மக்கள் பிரதிநிதிகளைப் பார்த்து, 'இவர்கள் யார்?' என்று கேள்வி போட்டார் என்பதற்கு. வேந்தன் அல்ல என்பது மட்டுமல்ல, உரத்த குரலும் உருட்டு விழியும் வீசிடும், இவர் யார்?—மக்களால் தேர்ந்தெடுக்க

ட்டவரா! அல்ல — அல்ல. எம். எ. ஏ. யாக வந்தவரா. அல்ல—ல்ல. தேர்தலிலே நிற்காதவர் — களிடம் சென்று 'வோட்' கேட் தவர்—'டில்லி'யின் தயவால் ருட்டு வழியில் பதவியில் அமர்ந் வர்.

இத்தகையவர், எம். எல். ஏ.க் ளைப் பார்த்துக் கேட்கிறார், 'பார் வர்கள்?' என்று.

எவ்வளவு துணிவும் மமதையும், ருக்க வேண்டும், இவருக்கு?

மன்னனல்ல; மன்னிக்க! மக்கள் ரதிநிதியுமல்ல; சகித்துக் காள்ள! வழியிலே போனவர் — தர்ப்பத்தால் மந்திரியானவர் — வர், சல்லடம் கட்டுகிறார்! இன் ம், இந்நாடு, அதனைச் சகித்துக் கொண்டிருக்கிறது!!

*

'சீச்சீ! இந்தப் பழம் புளிக்கும்' ன்று ஓடிய குள்ளநரியை இழுத்து ந்து, திராட்சைக் குலைகளை வளைத் த் தந்து, வளமிக்கத் தோட்டத் ல் விளையாட விடுவதைப்போல், ஜகோவிந்தம்! பஜகோவிந்தம்!! மனைத் துதிப்பதே—இனி என் லை' என்று, டில்லியிலிருந்து ரும்பியதுமுதல் கூறிக்கொண்டி ந்தவரை, "திருக்குற்றலம் ன்று 'தெய்வ காரியங்களில்' ஈடு ச் சித்தம் கொண்டுவிட்டேன்" ன்று 'கல்கி' ஏட்டில் வாரந் றும் விடாது எழுதிக்கொண்டி ந்தவரை, இழுத்துவந்து, ஆட்சி ல் அமர்த்தியது, 'டில்லி'. அதற்கு ம், 'தாங்கி'களும் கிடைத்தனர். ராட்சைத் தோட்டத்தில் காண்டுவந்து விடப்பட்ட நரி, ன்று நர்த்தனம் புரிகிறது! 'ஓடு! டு!!' என்று விரட்டினாலும், னக்குத்தான் இந்தப் பழம் புளிக் மே!' என்று கூறினாலும். கார ம் பல சொல்கிறது! ஓட விரும்ப லை. தோட்டம் அழிவதற்கு, ாக்கம் பல தருகிறது! விலக ரும்பவில்லை.

'நரி' இழுத்துவரப்பட்டதுமுதல் ன்றுவரை, அது, நடந்துவந்த த்தைப்பார்த்தால், எத்தகைய அது, என்பது, விளங்கும்.

துறவுப் படலம்

பஜகோவிந்தம்! பஜகோவிந்தம்!! மனை அனுதினம், பாடு மனமே!

காவடிப்படலம்

ராஜாஜியை முதல் மந்திரியாக்க சிலர் பகீரதப் பிரயத்தனம் செய் கிறார்கள். இது நடக்காது. ஒரு போதும் நடக்காது. 'கல்கி'

கைலாகு படலம்

கவர்னர் அழைத்தார் — மேல் சபை மெம்பராக்கினர். ராஜாஜியும் ஒப்புக்கொண்டார்.

தளுக்குப் படலம்

என்னவோ, என்மீது பாரத்தைச் சுமத்திவிட்டார்கள். நான், கிழவன்! என்ன செய்வது? அரசாங்கத்தை நடத்தவும் யாருமில்லை! தூக்கிக் கொள்ளுகிறேன், அரசாங்கப் பாரத்தை.

தருக்குப் படலம்

மகாஜனங்காள்! நான் உங்கள் முதல் மந்திரியென்றெண்ணுதீர் கள். ஆண்டவனின், தூதன். ஆண் டவனை வணங்குவதைப்போல், என் னிடம் பக்திசிரத்தை காட்டுங்கள்.

'விபீஷண'ப் படலம்

என் சர்க்கார், காங்கிரஸ் சர்க் காரல்ல. எல்லோரும் சேரலாம். வந் தால், பதவி, தருகிறேன்.

'பக்தி'ப் படலம்

மழையில்லையா?—மகேசனை மக் கள் மறந்ததன் விளைவு. இது. எல் லோரும் கடவுளைக் கும்பிடுங்கள், மழை கொட்டும்! கோயில்களி லெல்லாம் வருணஜபம் நடக்கட் டும். இதோ பணம்! சர்க்கார் கஜானா விலிருந்து தருகிறேன்!!

*

இவ்விதம் தொடங்கி வளர்ந்தது, ஆச்சாரியாரின் தர்பார்.

தட்டிப்பேச ஆளில்லை! — எது சொன்னாலும் கேட்பர்!!

காமராஜர் எதிர்ப்பு, இனிப்பலிக் காது.

மக்கள், நம்மை, ஆண்டவ னென்றே, நம்புகின்றனர்.

வெற்றி பெற்றுவிட்டோம்— நாடு இனி நமக்கு வேட்டைக்காடு தான்!!

இப்படியெல்லாம், கணக்குப் போட்டார்—அதன் விளைவாகவே, கர்ஜித்தார் — கல்வித் திட்டம் கொண்டுவந்ததும், 'கதைகளை' அவிழ்த்தார்.

'தோட்டம்' பாழாவதைக்கண்ட மக்கள் குமுறினர்—கூக்களின்குறை களைச் சொன்னோம், நாம்.

புருவத்தை நெறித்துப் பார்த் தார்!

'புதிய கல்வித் திட்டம் கண்ட தும், ஐயோ! ஆபத்து!'-என்றோம்.

ஆண்டவனுக்குச் சமம், நான்!— என்றார்.

அடுக்காது, ஐயன்மீர்! — என வேண்டினோம்.

அலட்சியப்படுத்தினர்.

எச்சரித்தோம்.

இறுமாப்போடு, பார்த்தார்.

மடமை!—அவரின் சொந்தச் சொத்தாயிற்று மார் தட்டினார்— நரியின் ஆட்டம் கண்டு கலிந்த நாடு, குமுறிக் கிளம்பியது, அறப்போர், துவங்கியது. ஆர்ப்பரித்தார் — 'அடக்காமலா விடுவேன்? யாரென என்னை நினைத்தீர்?' என்று மிரட்டு வது போல, துப்பாக்கிகளால் துளைத்தார்! பிணங்களைத் தந்தார்! சிறைகளை நிரப்பினார்!!

சேனை இருக்கிறது — எனும், மிடுக்கில், இப்போது, தெரிவிக் கிறார், 'இவர்கள் யார்?'— என்று. நாம் போலீஸ் மந்திரியாயிற்றே!— எனும், கர்வத்தில், சட்டசபை உறுப்பினர்களைப் பார்த்துக் கூறு கிறார்.

கவர்னர் என்சகா! நேரு என் நண்பர்!!—என்ற உருட்டுப் பார் வையோடு, சட்டசபையைப் பார்க் கிறார்.

எவ்வளவு விசித்திரமான நரி, இது!

'ஜனநாயகத்தைக் குழிதோண் டிப் புதைக்கிறீரே!'—என்று மக் கள் கேட்டால், வக்கீல் வாதம், நடத்துகிறார்.

எவ்வளவு, தந்திரமிருந்த, நரி, இது.

இதன்கையில் திராவிடப் பூங்கா, சிக்கிக்கிடக்கிறது! — எவ்வளவு வேதனை? நாட்டை ஆள, மேதா விலாசத்தைவிட, இப்போது நாண யந்தன்தான், தேவை. மக்கள் அரசு செழிக்க, மதியூகமிருந்த 'சர் வாதிகாரி' தேவையல்ல—இது தொடர்ந்தால், நாடு, காடாகத்தான் நேரும்.

நல்லோரே—சிந்தியுங்கள்.

★

'எங்களுக்கு விடுதலை!'

—[அடிகள்]—

"இந்தத் தர்மசங்கடமான நிலைமையிலிருந்து எங்களுக்கு விடுதலை அளித்த ஆச்சாரியாரே! உமக்கு எங்கள் வணக்கம். சட்டசபையில், மக்களின் பிரதிநிதிகளாக வீற்றிருக்கும் பெரும்பான்மை எம். எல். ஏ-க்கள், எங்கோ இருந்து ஏதாவது ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் எங்களை வம்புக்கு இழுப்பதுபோல், ஆச்சாரியாருக்கு நினைவூட்டித் தொல்லைதரப் பார்த்தார்கள். ஆனால், நாங்கள் இதற்கெல்லாம் மசியமாட்டோம் என்பது அந்த அப்பாவி எம். எல். ஏ-க்களுக்கு எப்படித் தெரியும்? 'எதை யெதை எல்லாமோ எப்படி யெப்படியெல்லாமோ செய்ய வல்லவர்களாமே இவர்கள்' என்ற பெருமைக்கும் புகழுக்கும் இலக்காக இருக்கும் எங்களை இந்த எம். எல். ஏ-க்கள் இலேசாக எண்ணிக் கொண்டு, தங்கள் காரியத்தைச் சாதித்துவிடலாம் என்று பார்த்தார்கள்! முடியுமா இவர்களால்? நடப்பது மக்களாட்சி என்பது தெரிந்தும், ஏனோ இந்த எம். எல். ஏ-க்களுக்கு எங்களைப் பற்றிய நினைவு வந்ததென்பதுதான் எங்களுக்கே புரியாத புதிராக இருக்கிறது. நாங்கள் எதையும் சீர்தூக்கிப் பார்த்து முடிவுகூறும், ஆற்றலைப் பெற்றவர்கள் என்ற போதிலும், இந்த எம். எல். ஏ-க்களின் நோக்கத்தை எங்களால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. மக்களாட்சி என்றும், ஜனநாயக ஆட்சி என்றும் சொல்லப்படும் ஆளுகையில்தான் நாங்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தால் தவிக்கிறோமே! காரணம், எதையும் எங்களைக் கலந்து ஆலோசிக்கவேண்டிய நிலைமை, சந்தர்ப்பம், சூழ்நிலை எதுவும் ஏற்படாமலேயே காரியங்கள் நடக்கின்றன—நடத்தப்படுகின்றன. தப்பித்தவறி, தவிர்க்கமுடியாத சங்கடமான நிலை ஏற்பட்டு, எங்களுடைய ஆலோசனைக்கு ஏதாவதொன்று வருகிறதென்று வைத்துக்கொண்டாலும், நமது ஜனநாயக ஆட்சித் தலைவர்களின் கண்களில் நாம் அகப்படுவதில்லை. அந்தச் சமயத்தில் நாங்கள் ஏதாவதொரு உருப்படியான காரியங்களில் ஈடுபட்டு எங்களின் ஓய்வின்மையை ஆட்சித் தலைவர்கள் உணரும்படி செய்துவிடுவோம் என்பதுமட்டுமல்ல. ஜனநாயக ஆட்சியில் நடைபெறும் சம்பவங்கள் எதனையும் நாங்கள் ஆராய்ந்து முடிவு கூறமாட்டோம் — கூறக்கூடாது—மீறிக் கூறும்படி வற்புறுத்தினால், அப்படிப்பட்ட ஆட்சி ஜனநாயக ஆட்சியாகாது என்று திட்டவட்டமாகவே கூறியும் விடுவோம். ஏனென்றால், ஜனங்களைத் தங்கள் நாயகர்களாக, அதாவது, நாட்டிலுள்ள பொதுமக்களையே தங்கள் தலைவர்களாக மதித்து ஆட்சி புரியும் ஒரு நாட்டில், எந்தக் காரியம் செய்யப்பட்டாலும், அது, அந்த நாட்டு மக்களின் விருப்பத்தையும் ஆதரவையும் பெற்றதாகத்தான் இருக்கும். ஆதலால், மக்களின் பரிபூரண ஆதரவோடு நடைபெறும் எந்தக் காரியத்துக்கும் எங்களுடைய யோசனையும் தீர்ப்பும் எந்தக் காரணத்தைக்கொண்டும் தேவைப்படாது. எனவேதான், ஆச்சாரியாரே! உமக்கு எங்கள் வணக்கம் என்று கூறுகிறோம்."

*

"எல்லா விஷயங்களையும் புரிந்துகொள்ளவும், அவற்றிற்கேற்ப நல்ல தீர்ப்புக் கூறவும் வல்லவர்களாகிய நீங்களே இவ்விதம் ஏனோதானோ என்ற முறையில் பேசுவது சரியல்ல. ஜனநாயக முறையில்தான் ஆட்சி நடப்பதாக, நீங்கள், உங்களுக்கு இயல்பாக இருக்கும் பெருந்தன்மையின் காரணமாக நினைக்கிறீர்கள்—சொல்லுகிறீர்கள். ஆனால், இன்று நடப்பது ஜனநாயக ஆட்சியா அல்லது சர்வாதிகார ஆட்சியா என்பதனை அறிந்து கொள்ள வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை என்று நீங்கள் கூறினால், அதை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. காரணம், நீங்களும் இந்நாட்டு மக்களில் ஒரு பகுதியினர் என்பது மட்டுமல்ல, நாட்டில் நடை

பெறும் ஒவ்வொரு சம்பவத்தை
நன்கு கவனித்துக் கருத்தில் வை
துக் கொள்வதும், காலம் வரு
போது அதுபற்றிய முடிவை
கூறுவதும் உங்கள் பொறுப்பா
இருக்கிறது. ஆதலால், நீங்கள் எ
களிடமிருந்து தப்பித்துக் கொள்
முடியாது. எங்களின் விண்ணப்ப
திற்குச் செவிசாய்த்து அதன்ப
நடக்கக் கடமைப்பட்டிருக்கிறீர்க
இன்று நடப்பது ஜனநாயக ஆட்
தான் என்று கூறிக்கொள்வ
வாயிலாக உங்களுக்கிருக்கும் அ
தியான திறமையைக் காட்டிக்கொ
வதுமன்றி, 'நாம் ஏன் இந்தச் ச
டத்தில் போய் மாட்டிக் கொள்
வேண்டும்' என்ற போக்கிலும்
களை அலட்சியப் படுத்த நினைப்ப
உங்களுக்கே உரிமையான நடு
லைமைக்கு ஏற்றதாகாது." நாங்
மக்களின் பிரதிநிதிகள். மக்க
நன்மைக்கான காரியங்களைச் சட்
பூர்வமாக நிறைவேற்றித் த
பொறுப்பில் உள்ளவர்கள். ம
ளின் உரிமையையும் சுதந்தர
யும் பாதிக்கும் எந்தக் காரிய
சட்டமாகாது தடுத்து மக்களுக்
பாதுகாப்பளிக்கும் நிலையிலுள்
வர்கள். சட்டசபைக்கு வராத
ளும், வந்தும் வாய் மூடி இருந்த
ளும் நீங்கலாக அன்று கூடியிரு
276 பிரதிநிதிகளில் 139 பிரதி
கள், அதாவது, பெரும்பான்
யான பிரதிநிதிகள் ஆச்சாரியா
தனிப்பட்ட முறையில் அமுலா
பட்டிருக்கும் ஒரு திட்டத்
எதிர்த்து, அதை நிறுத்தி வை
உங்களுடைய பரிசீலனைக்கு
வேண்டுமென்று கேட்டிருக்கிறோ
அதைத் தீர்மானமாகவும் கொ
வந்து பெரும்பான்மை வாக்கு
பெற்று நிறைவேற்றியும் இரு
றோம். இந்த நிலையில் நீங்
இங்கு நடைபெறும் ஜனநா
ஆட்சி முறைக்குத் தத்துவார்
கூறித் தப்பித்துக் கொள்ள மு
வதை நாங்கள் ஒரு போதும் ஒ
கொள்ள முடியாது. பெ
பான்மை பிரதிநிதிகளாகிய எ
ளால் ஆட்சேபிக்கப்படும் இத்
டம் பொதுமக்களின் ஆதர
பெறாதது மட்டுமல்ல, அவர்க
கவனத்திற்கே கொண்டு வர
தாகும் என்பது உங்களு
தெரியாததல்ல. ஆச்சாரி

(13-ம் பக்கம் பார்க்க)

★ விடுதலைப் பாதையில் ★

அரசியல் வாழ்வு, அந்தி சாய்ந் தும் கிளம்பிடும் தண்மதியில் லவுவதல்ல! வெப்பங்கொட்டும் திரவன் கொடுமையைச் சகித்துக் காண்டு, பாலைவனத்தில் நடந்து செல்வது!! — இதுவே, நாட்டின் டுதலைப் போரிலீடுபடும் வீரர் ளின் இதயத்தில் ஒலிக்கும் கீத ாகும்.

துப்பாக்கிகள் முழங்கும்! பீரங்கி ள் வெடிக்கும்!!—விடுதலைப் போரி லீடுபட்டோரின் காதுகளில், இதய கீதம் கேட்குமேயொழிய, இவை யதுவும் ஒலிக்காது.

தாயகத்தின் கால்களில் பூட்டப் பட்டிருக்கும் அடிமை விலங்கை அறுத்தெறியப் புறப்பட்டுவிட்ட அறப்போர்ப் படை, ஏறு நடை பாட்டு எடுத்தடிவைத்தவண்ண ம்ருக்குமேயொழிய, எதிரிகளின் வேட்டுச் சப்தத்துக்கும் ஓட்டை விழுந்துபோன உறுமுதலுக்கும், அஞ்சாது.

இந்த அஞ்சாமையின் அளவைத் தான், பாரதியார், காட்டினார்.

அச்சமில்லை! அச்சமில்லை! அச்ச மென்பதில்லையே!

உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற பாதிலும் — அச்சமில்லை! அச்ச மில்லை!!

தேசியக் கவி, தன்னுடைய விடு தலை வீரர்களின், உள்ளத்துக் கீதத்தை, முழக்கினார் — வெள்ளை யனின் வெறிச்செயலை விளக்கினார்.

தாயகத்தின் விடுதலைக்காக தமது வாழ்வை அர்ப்பணித்துவிட்டவர் களை, ஆதிபத்யம் செலுத்துவோர் அன்பாக நடத்தியதாக, வரலாறு கூறவில்லை.

தடியடி! பொய் வழக்கு! சிறை வாசம்! துப்பாக்கி! — இவைகளைக் கொண்டு, அடக்கி ஒடுக்கிடத்தான் முனைவர்.

அவைகளைத் துச்சமாக மதிக்கும் துணிவு பெற்றபின்னரே, கையில் காடியேந்தி, கருத்தில் கொள்கை தாங்கி, விடுதலை வீரன், புறப்படு கிறான். "விடுதலை! விடுதலை!!"— எனும் வீரப் பண் பாடிக்கொண்டு, அநடை போட்டவண்ணம் அவன் செல்லும் அழகைப் பார்த்ததால் தான், இசை வாணிகளின் குரல், "சிறைச்சாலை என்னசெய்யும்? தேசாபிமானம் கொண்ட மாந்தரை சிறைச்சாலை என்ன செய்யும்?" என்று பாடிற்று.

தாயகம்—அன்னியனின் பிடியில் சிக்கி அவதிப்படுவதைக் கண்டு உள் ளம் குமுறிவிட்டால், அந்தக் குமு றலை அடக்க, எந்தச் சக்தியாலும் முடியாது. சிறை அழைத்தாலும், சித்திரவதைகள் வீசப்பட்டாலும், சிந்தைநோகான்!மனமகிழ்ச்சியோடு மாபெரும் தியாகத்துக்குத் தன்னை அர்ப்பணிக்கத் தயங்கான்!!—இந்த, உள்ளத்து உறுதியை, சுயராஜ்யப் போரின்போது, காங்கிரஸ் தலைவ ராயிருந்த அபுல்கலாம் ஆசாத், வெளியிட்டார்—லட்சோப லட்சம் மக்கள்கூடிக்கிடந்த லாகூர் பொதுக் கூட்டம் ஒன்றில், "சிறைக்குள்ளே, கொண்டு பூட்டுகிறாய். பூட்டு! எங் கள் நாடே சிறைக்குள்ளே கிடக் கும்போது, நாங்கள் எங்கேயிருந் தால் என்ன? நாடும், சிறைதான்! வீடும் சிறைதான்! வெளியிலே யிருந்து உன் கொடுமைகளை அனுப விப்பதைவிட, உள்ளேயிருப்பதில், எமக்கென்ன நஷ்டம்?"

இத்தகைய நெஞ்சுரத்தின்முன், பீரங்கியும் தூக்குமேடையும்என்ன செய்யும்! நாடே, சிறைக்குள் பூட் டியிருக்கும்போது, நாம் எங்கிருந் தாலென்ன! — என்கிற, கீதத்தை, இதயத்திலே ஏந்திவிட்ட இலட்சிய உருவங்களின்முன், குண்டுகள் மலர்ச்செண்டுகளாகும்! சிறை, சிங் காரப்பூங்காவாகும்! தடியடி—தியா கத்தழும்பாகும்! இத்தகைய சுதந் திரவேட்கை கொண்டுவிட்டதால் தான், கைபிடித்த காதலியிடம் விடைபெற்றுக் கொண்டு, தாவி வரும் தளிர்க்குழந்தையைத் தூக்கி முத்தம் இட்டுவிட்டு, தாயிடமும் தந்தையிடமும் விடைபெற்றுக் கொண்டு, அறப்போர்வீரன்கிளம்பு கிறான்.

இந்த அறப்போர் பட்டாளம் — ஆமாம், அறப்போர்.—கிளம்பிவிட் டால், அதனை எவராலும் வீழ்த் திடமுடியாது. வெளியாதிக்கத்தின் கொடுமையை ஒழிக்க, தம்மைத் தத்தம் செய்த வீரர்களின் வரலாறு களை அறிவோம் நாம். டச்சுப்பிடி யிலே கிடந்த இந்தோனேஷியா வின் மடியிலே தவழ்ந்த விடுதலை வீரர்களை சுட்டித்தள்ளிற்று, டச்சு அரசாங்கம்? "சுடு! சுடு!!—குண்டு கள் உள்ளவரையில் சுடு!" என்று கூறியவண்ணம் முன்னேறினர், இந்தோனேஷியா வாலிபர்கள் முடிவில், டச்சுப் படையிடம், குண்டுகள் தீர்ந்தனவேயொழிய, விடுதலை வீரர்களின் உள்ளத் திலேயிருந்த வீரம் தீரவில்லை! வெற்றி முரசு கொட்டினர்—விடுதலை பெற்றனர். ஆதிக்கக்காரனின் பிடி யில் சிக்கி அவதிப்பட்ட சீனம் — முதலில் சிந்தை நொந்துகிடந்தது— பிறகு, சினந்தது — தானே துப் பாக்கி யேந்தியது — குண்டுகள் தாக்க, சியாங்கின் படைகளைவிரட்டி விட்டு, விடுதலை வீரர்கள் வெற்றி பெற்றனரேயொழிய, மமதை யுச்சி யில் வீற்றிருந்த சியாங் அல்ல.

இன்றும், இந்தோசீனம், பிரெஞ் சுக்காரன் பிடியிலிருந்துவிடுபட துப் பாக்கி யேந்தியபடி, போராடிக் கொண்டிருக்கிறது.

விடுதலைத் தாகம் பெற்றோரின் வீரம், 'வாழ்வு அல்லது சாவு!' எனும் கட்டத்துக்கு வர, நேரம் பிடிக்காது. துளைக்கும் துப்பாக்கி யைத் தாங்களே தூக்கிக்கொண்டு விடுவார்கள். பிறகு ரணகளம்தான்! பிணம்—இருபக்கமும்தான்!!

இந்தப் பேராபத்தைத் தவிர்த்து மனித உயிர் மடிவதைத் தடுத்து, தம்முடைய விடுதலைத் தாகத்தை,

பொள்ளாச்சியிலே நடைபெறும் புதுமை

பொள்ளாச்சியில், ரயில் நிறுத் தக் கிளர்ச்சியில் கலந்துகொண்டு அபராதம் கட்ட மறுத்து சிறை சென்றுள்ள தோழர்களின் சொத் துக்களை ஜப்தி செய்து, அபராதத் தொகை 50 ரூபாயை எடுத்துக் கொண்டு, தோழர்கள் கே. என். திருமூர்த்தி, ஆர். வி. முருகநாதன் வி. சி. திருமன் (கவுன்சிலர்கள்) கே. என். கிருஷ்ணசாமி, எம். சதா சிவம், க. துரைக்கண்ணன், ச. கோபால் முதலியோரை விடு தலை செய்திருக்கிறது, சுயராஜ்ய சர்க்கார்! இரண்டொரு இடங்களில் மட்டுமே இந்தப் புதுமை நடந்திருக் கிறது! கொல்லைப்புற சர்க்கார் குறுக்கு வழியைப் பின்பற்றுகிறது போலும்!

தி. மு. க. தோழர்கட்கு ஓர் வேண்டுகோள்

ஜுலை 15-ல் ரயில் நிறுத்தப் போராட்டங்களில் கலந்து கொண்ட தோழர்கள், நிறுத்திய ரயில்கள், நிறுத்தப் பட்ட இடங்கள், தோழர்கள் அடைந்த தண்டனைகள் முதலியன பற்றிய விவரமான செய்திகளை அறிய விரும்புகிறோம். ஆங்காங்குள்ள நமது கழகத் தோழர்களும், கிளைக் கழகங்களும் இது பற்றிய செய்திகளைத் திரட்டி 'திராவிட நாடு' அலுவலகம், காஞ்சிபுரம் என்ற விலாசத்துக்கு அனுப்பும்படி அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

நேர்மையான முறையில் காட்டிக் கொள்ளத் துவங்கிய முறைதான்— சத்யாக்கிரகம்,

இதனை நாம் அறப்போர் என்போம்.

வெள்ளையன் பிடியில் கிடந்த பூமியைமீட்க, காந்தியார் துவங்கிய சத்தியாக்கிரகங்கள்—பலப்பல.

ஒவ்வொன்றும், ஒவ்வோர் படிக் கட்டுக்களாக விளங்கின—சுயராஜ்ய மாடியை அடைய.

அந்த சத்யாக்கிரகங்களின்போது வெள்ளையன் கையாண்ட அடக்கு முறை அட்டவணைகளை — நாடு, அறியும்.

சாத்வீகமான சத்யாக்கிரகம்!— எனினும், வெள்ளையன் மிரண்டான் — தன்னுடைய ஏதேச்சாதிகாரப் பிடி, தளர்வதையெண்ணி.

அமைதியான முறையில்! — என்று அறிக்கை விடுவார் காந்தியார். அமைதி கெடும்படியான சம்பவங்கள், நாட்டில் ஏற்படாமலிருந்தது கிடையாது.

1942-ல் காங்கிரஸ் தலைவர்கள், வெள்ளையனை எதிர்த்து, "யுத்தத்துக்குப் பணம் தராதே! உதவி செய்யாதே!!' எனும் முடிவைச் செய்தனர்.

உடனே தலைவர்களையெல்லாம், வெள்ளையன் சிறைக்குள்பூட்டினான்

அப்பப்பா! நாடே எரிந்தது — ரயில்கள் கவிழ்ந்தன—தந்திக் கம்பிகள் அறுப்பட்டன — நாசகாரியங்கள் எங்கும் நடைபெற்றன.

'ஆகஸ்டுப் புரட்சி' எனும் பெயரால், ஆங்காங்குமிருந்த காங்கிரஸ் வாலிபர்கள், திட்டமிட்டவண்ணம் இந்தச் செயல்களில் ஈடுபட்டனர்.

தலைவர்களைச் சிறையிலே பூட்டியதன், பலன், இது!—எல்லோரும் கூறினர்.

நான், இவைகளை அனுமதித்திருக்க மாட்டேன்!—என்று, காந்தியாரும், கூறினார்.

உண்மையுங்கூட! — சாத்வீகம், வெள்ளையனின் அவசரப்போக்கால், சீர்குலைந்தது.

தலைவர்களைத் தண்டித்து விட்டால், எல்லாம் அடங்கிடும் என்றெண்ணினான் — நிலைமை, மோசமாயிற்று! நெருப்புப் பிடித்துக் கொண்டது!!

இந்த நிலைமைகளை, அன்பர் ஆச்சாரியார், நன்கறிவார். ஏனெனில், காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும், சிறையில் கிடந்தபோது — இவர் மட்டும், வெளியிலேயிருந்தவர்!

இருந்தும், 'ஜுலை-14' 'ஜுலை-15', அறப்போர்கள், தி.மு.க-வால், நடைபெறப் போகின்றன வென்று அறிந்ததும் அதற்குமுதல்தினமே, தி. மு. க. பொதுச் செயலாளரையும்—செயற் குழுவினரையும், சிறைக்குக் கொண்டு சென்று பூட்டினார்.

தலைவர்களைச் சிறையில் பூட்டினான், வெள்ளையன்! 'ஆகஸ்டு', நடந்தது.

தி. மு. க. தலைவர்களைச் சிறையிலே பூட்டினார், ஆச்சாரியார். 'ஆகஸ்டு' எங்கும், நடைபெறவில்லை!

அமைதியானமுறையில், சென்னை மறியல் நடந்தது.

ஜுலை-15, ரயில் நிறுத்தம், பகலில் மட்டுமே, நடந்தது.

ஓரிடத்தில் கூட, அசம்பாவிதமான சம்பவம் நடைபெறவில்லை.

அந்தளவுக்கு, அறப்போரின் வலிவை, திராவிட முன்னேற்றக் கழகத்து விடுதலை வீரர்கள் உணர்ந்திருக்கின்றனர்.

அராஜகத்தை உண்டு பண்ணவோ, நாட்டின் அமைதியைக் கெடுக்கவோ, பலாத்காரத்தைச் சிருஷ்டிக்கவோ — அல்ல, ஜுலை 14, 15 தேதிகளைத் தேர்ந்தெடுத்தது.

அறப்போர்—எதற்கு?

தம்முடைய கோரிக்கைகளைக் கூற!

பலன்?

அடக்கு முறை! அன்பு வார்த்தை அல்ல!!

தலைவர்கள் சிறைக்குள்ளே பூட்டப்பட்டிருப்பது கண்டும், தம் சித்தம் சென்ற வழிகளில், ஈடுபடவில்லை, தி. மு. க. வீரர்கள்.

சிறையிலே தலைவர்களைப் பூட்டி விட்டார்களே என்பது கண்டு, உணர்ச்சியையும் கடமையையும் உதறிவிடவில்லை.

சங்கிலியை, இழுத்தார்கள் — ரயிலை, நிறுத்த.

ரயில் நிற்காததால், முன் சென்று படுத்தனர்.

தம்முடைய கண்டனத்தைத் தெரிவிக்க சங்கிலியை இழுத்தும், ரயில் நிற்காததைக் கண்ட அறப்போர் வீரர்கள், அவர்களாகவே செய்து கொண்ட முடிவு—தண்டவாளத்தில் படுப்பது. அந்த நேரத்தில், வேறெவ்வித, மாற்று நடவடிக்கையில், ஈடுபட முடியும், அவர்கள்?—'ஆகஸ்டை' நடத்துவதல்லவே, அவர்கள் திட்டம்! ஆகவே, அறப்போரின் வழியில், ஈடுபட்டனர்!!

அவ்விதம், அமைதியான முறையில், அறப்போரிலீடுபட்ட தோழர்களைத்தான், அரசாங்கம் கொட்டுகிறது.

ரயிலை நிறுத்தினாயா? — கோர்ட்டில் கேட்கப்படுகிறது, இக்கேள்வி.

ஆம்!—வீரர், மறுக்கவில்லை, ஒப்புக்கொள்கிறார்.

சிறைவாசம்! — புன்சிரிப்போடு, தலைவணங்கி ஏற்றுக்கொள்கிறார்.

சிறைக் கதவு திறக்கிறது! மூடுகிறது!!

வருகிறார்கள்! போகிறார்கள்!! அப்போதும், அவர்கள் எழுப்பும் முழக்கம், 'திராவிட நாடு திராவிடருக்கே! அடக்குமுறை ஒழிக!' என்பதுதான்.

பம்பாய் தி. மு. க.

ஜூலை 15ந் தேதிய அறப்போர் குறித்து, 'பிரீபிரஸ் ஜர்னல்' எனும் ஆங்கில ஏடு, கிழ்த்தரமான தலையங்கம் ஒன்றைத் தீட்டியிருக்கிறது.

அதனைக் கண்டித்தும், வாபஸ் வாங்கவேண்டுமெனக் கோரியும், பம்பாய் திராவிட முன்னேற்றக் கழகத்தார், எச்சரிக்கை 'நோடீஸ்' ஒன்று விடுத்துள்ளனர்.

இவ்வண்ணம், அமைதியே உருவான முறையில், தம்முடைய இலட்சியத்துக்காக சிறைக்கோட்டமேகிக்கொண்டிருக்கின்றனர் — நம் தோழர்கள்.

அவர்களின் உள்ளத்துணர்ச்சி கண்டு, விடுதலை வீரன் வணக்கம் செலுத்துவான்.

ஆனால், நம்முடைய 'வார்தா சீடரோ' அமைதியான முறையில் நடந்துகொள்ளும் அவர்கள்மீது, ஆத்திரத்தை வீசுகிறார்.

சட்டத்தின் பொந்துகளில் நுழைந்து, புதிது புதிதான சட்ட ஆரத்துக்களைத் தேடியெடுத்து, வழக்குகளை வீசுகிறார்.

*

கண்ணதாசன், அம்பில் தர்மலிங்கம், 21 பேர்மீது இ. பி. கோ. 147, 332, 337, ரயில்வே சட்டம் 122, 128.

*

கே வி. கே. சாமி, ரத்னம், சிவசாமி, தங்கப்பழம், நடராசன் ஆகிய 103 பேர்மீதுமிகப் பயங்கரமானகுற்றச்சாட்டுகள்.

ஜாமீனில்விட்டு, வழக்குக்கான ஏற்பாடுகளைக் கவனிக்கவும் அனுமதியில்லை.

*

அண்ணுதுரை, மதியழகன், சம்பத், நெடுஞ்செழியன் நடராசன் ஆகியோர்மீது, 117, 41, 341, 188, ரயில்வே சட்டப்படி 108, 128.

*

தூத்துக்குடி தோழர்களும், தி. மு. க. பொதுச் செயலாளரும், தோழர்களும், 'ஜூலை 14'க்கு முன்னரே, சிறையில் போட்டனர்.

அவர்கள்மீதும், வழக்கு! கண்ணதாசன் முதலியோரோ தடியடி தாங்கி துப்பாக்கியால் துளைக்கப்பட்டனர்.

அவர்கள்மீதும், வழக்கு! ஆச்சாரியார் அரசாங்கம் சென்றுகொண்டிருக்கிற பாதை இது. இந்த வழக்குகளில், 'நீதி'யின் தீர்ப்பு எங்ஙனமிருக்குமோ?—அறியோம், நாம்.

ஆனால், இவ்விதம், விடுதலை வீரர்களின் குரலையும் நடவடிக்கைகளையும், ஆண்டுக்கணக்கில் அடக்கிடலாமென்று முயல்வது — வெறும் கனவாகத்தான்முடியும்.

சிறைச்சாலைகளைக் காணும்போது விடுதலை வீரர்கள், சிரித்தபடிதான் சென்றுகொண்டுள்ளனர்!

சிரிக்கின்றனரென்றால், —வீட்டில் குடும்பம் என்று ஒன்றிருக்கிறது— அது வாழ, ஏராளமான பணம் வைத்திருக்கிறோம் — என்ற எண்ணங்களால், அல்ல.

அந்தப் பிரச்னை, வேறு!—எனினும், அவைகளை மறந்துவிட்டு, ஆட்சியின் அலங்கோலங்களை எண்ணிச் சிரித்தபடி, செல்கின்றனர்.

தியாகத்தின் சின்னங்கள் அவர்கள்—வாலிப வயதின் வசீகரங்களையும், வயோதிகப் பெற்றோர்களையும், குமுறும் குடும்பத்தையும், வறுமை கொட்டும் வாழ்க்கையையும் மறந்து, சென்றுகொண்டிருக்கிறார்கள்.

அவ்விதம் சிறைக்குச் சென்றுகொண்டிருப்போரில் பலர், பஞ்சாயத்து போர்டு தலைவர்கள், நகரசபை உறுப்பினர்கள், ஜில்லா போர்டு உறுப்பினர்கள், கல்லூரிக் காளைகள், தொழிலாளிகள்.

இவர்களின் தியாகத்தை, எள்ளி நகையாடுகிறார், ஆச்சாரியார்!

இப்படித்தான், ஆச்சாரியாரும் அவரது தோழர்களும் சிறைக்கோட்டம் சென்றபோது—எள்ளி நகையாடினான், வெள்ளையன்.

இன்று, அவன் இருப்பது இங்கல்ல; 6000 மைல்களுக்கப்பால்.

இதனை அறிவுறுத்துகிறோம்— ஆச்சாரியார் பீடத்துக்கு.

விடுதலைப் பயணத்தில் ஏற்படக்கூடிய, தொல்லைகளையும் துயரங்களையும், தி. மு. க. அறியும்.

அவை யனைத்தையும், என்றாவது ஒரு நாள் எதிர்பார்த்திருந்தது தான், தி. மு. கழகம்.

எனவேதான் தீரர்கள் சிரித்தபடி, சிறைக்குள் சென்றுகொண்டிருக்கின்றனர். தியாகத் தழும்புகளை ஏற்றுக்கொண்டிருக்கின்றனர்.

தழும்புகள்—மறையக்கூடியது.

பூட்டிடும் சிறைக்கதவும் — எப்போதும் மூடியிருக்காது, ஒரு நாள் திறக்கத்தான் வேண்டும்.

"தொல்லைகள் எமக்குத்தூசுகள் தாயகவிடுதலையே எம் குறிக்கோள்"

இதனைப் பலமுறை, எடுத்துக்கூறி வந்துள்ளோம். எனினும் ஆச்சாரியார், அடக்குமுறையை அவிழ்த்துவிட்டு, ஆனந்தம்காண முயல்கிறார் —அகப்பட்டோரையெல்லாம், சிறைக்குள் பூட்டி முனைகிறார்.

சிறைக்குள் சென்றுகொண்டிருக்கிறார்கள், அறப்போர் வீரர்கள்.

அவர்கள், எதிர்கால தாயகத்தின் முடிசூடா மன்னர்கள்! இளைஞர்களின் உள்ளத்தில் குடியேறிவிட்ட தியாகிகள்!!

அவர்களை இன்று சித்ரவதைக்காளாக்கலாம். நாளை?-இப்போதே, பதில் தயாரித்துக்கொள்ளட்டும், அடக்குமுறை ஆட்சியினர்!

'நம்ம டில்லி!'

டயர் பேரம் குறித்து, ஆக. 4-ல் டில்லி பார்லிமெண்டில், பொதுக் கணக்குக் கமிட்டி, தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது.

முதலில் ஒருவருக்குக் கொடுக்கப்பட்டிருந்த 'ஆர்டரை' பிறகு இன்னொருவருக்கு மாற்றிக்கொடுக்கப்பட்டது மிக மிக மோசமானது என்று அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறது.

இந்தப் போக்கின் விளைவாக ஏற்பட்ட தகராறை 'ராஜி' செய்துகொள்வதற்குமட்டும் டில்லி சர்க்கார் ரூ. 17,64,385 (சுமார் 18 லட்சம்!), கொடுத்திருக்கிறதென்றும், இது மிக மிக வருந்தவேண்டிய நஷ்டம் என்றும், கமிட்டி கூறியிருக்கிறது.

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரி லீடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு; நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்குமுறை!!

திராவிடநாடு

காஞ்சி] 9—8—53 [ஞாயிறு

கல்லக்குடி அறப்போர்

★

வளர்ந்து வந்த உரிமைக் குரலைக் காட்டுவதற்கு, அந்த நாள், காங்கிரஸ் தலைவர்கள், கையாண்ட முறைகளை யறிந்தோர், திராவிட முன்னேற்றக் கழகம் துவங்கி நடாத்தும் அறப்போர்களின் வகையையும் வலிவையும் அறிந்து கொள்ளலாம்.

துப்பாக்கியும் பீரங்கியும் ஏந்தாது, உரிமைச் சக்தியொன்றினை மட்டும் காட்டி, ஊராளும் பாக்யம் பெற்றோருக்குத் தமது அதிருப்தியைக் காட்டிக் கொள்ளும் முறையைக் காட்டு ராஜாவும், பழித்திடான்.

விரோதிகளின் மீது, வெடிகுண்டுகளை வீசி, பழிதீர்த்துக் கொண்டு விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதென்பது—ஓர், முறை.

தம்முடைய உரிமைக் குரலின் அளவையும், மக்கள் மன்றத்தின் உணர்ச்சியையும் காட்டி, மாற்றாரின் கண்களைத் திறக்க முயல்வது, மற்றோர் முறை.

மனித இரத்தத்தையும், உயிரையும், வீணாக்கச் செய்வது—முதல் முறை.

மனித அன்பையும், கொள்கையின் உரத்தையும், அமைதியான முறையில் ஒன்று சேர்த்துக் காட்டுவது—இரண்டாவது முறை.

இந்த இரண்டாவது முறையையே, திராவிட முன்னேற்றக் கழகம், தன்னுடைய போர் முறையாக மேற்கொண்டிருக்கிறது.

நடப்பது காங்கிரசாட்சி! அவர்கள் செய்து காட்டிய முறைகளையே நாமும் செய்து காட்டுவோம்!!—என்பதல்ல, இதற்குக் காரணம்.

மனித முறையும், அமைதித் தத்துவமும், இரண்டாவது முறையிலிருப்பதாலேயே, திராவிட முன்னேற்றக் கழகமும், அவ்வழி செல்கிறது.

நாட்டில் அராஜகத்தையும், அட்டூழியங்களையும், சிருஷ்டிப்பது—கஷ்டமான காரியமல்ல. அதுவும், இந்தக் காங்கிரசாராட்சியில், மக்கள் மன்றம், உலர்ந்த சருகாகிக் கிடக்கிறது. ஒரு சொல்! சிறு தீப்பெட்டி! —தீர்ந்தது, காரியம். ஆனால், தீ வைப்பது, அரசாங்க அலுவலகங்களை இடிப்பது போன்ற இவ்வழிகள், நமக்கு எப்போதும் பிடிக்காதவையாகும்.

இதனால்தான், காங்கிரஸ்காரர்கள், 1942 ஆகஸ்டுக் கலவரங்களில் ஈடுபட்டபோது, நாம் கண்டித்தோம்.

அரசியல் கட்சிகள், கொள்கை வலிவின் மீதும்; அது தரும் மக்கள் சக்தியின் மீதும்; உரிமைக் குரலையெழுப்ப வேண்டுமே தவிர, தடியாலும் கத்தியாலும், பிறரைப் பணியவைப்பதென்பது, அழகல்ல; ஜனநாயக யுகத்துக்கு ஏற்றதுமல்ல.

இதனாலேயே, தி. மு. க. அடிக்கடி 'அமைதி! கண்ணியம்!!' எனும் வார்த்தைகளை, எழுத்திலும் பேச்சிலும் உபயோகித்து வருவதோடு, செய்கையிலும் காட்டிவருகிறது.

சமூகம், அன்பின் அடிப்படையிலும், மனிதப்பண்பு மாசுபடாத வகையிலும், முன்னேறவேண்டுமென்பது, நம்முடைய ஆசையாகும்.

இதனாலேயே நம்முடைய வடநாட்டு ஆதிபத்ய எதிர்ப்பைக் காட்டிக்கொள்ளவும், தமிழகத்தின் உரிமைக்குரலை எழுப்பவும், அமைதியான முறையொன்றினை வகுத்தோம்.

காங்கிரசார் அந்தக் காலத்தில் 'மில்' துணிகளை எரித்தனர்; துணியின்மீதுள்ள கோபத்தால் அல்ல—சுரண்டிச் செல்லும் இங்கிலீஷ்காரனின் அக்கிரமச் சுரண்டலைக் கண்டிக்கவும், அதனை மக்களுக்கு எடுத்து விளக்குவமான, வகையில்.

மான்செஸ்டர்! லங்காஷயர்!!—என்று கோபத்தோடு கர்ஜித்தனர்.

அதைப்போன்றதுதான், டால்மியாபுரம் போராட்டமும்; கடந்த 25 நாட்களாக அறப்போர் வீரர்கள், டால்மியாபுரம் எனும் ஸ்டேஷனில், 'கல்லக்குடி' எனும் பெயர்த்தாளினை ஒட்டிவிட்டு வருவது, அந்த 'போர்டி'ன்மீதுள்ள கோபத்தால் அல்ல, அவ்விதம் செய்வது தென்னாட்டைச் சுரண்டிக்கொழுக்கும் வடவர் ஆதிபத்யம், தென்னவரின் மொழியையும் பண்பையும் சூறையாடிடும் கேட்டினைக் கண்டிக்கவும் எடுத்துக்கூறவுமேயாகும்.

வடவர் ஆதிக்கம் இந்நாட்டில் பொருளாதாரத் துறையில்மட்டுமல்ல, மொழியில் — வாழ்க்கைத் துறையில்கூட, புகுந்து அடிமைப்படுத்த முயல்கிறது.

இந்த முயற்சியின் ஒரு கட்டமாகவே இந்தியைத் திணிக்கிறது—அது, கட்டாயப் பாடமாகப் புகுத்தப்பட்டபோது, எதிர்த்தோம் வென்றோம். இப்போதோ, ரயில் போர்டுகளில், தலைப்பில் 'இந்தி' கோலோச்சுகிறது—அடியில் தமிழ் மொழிகிடக்கிறது. சாதாரணவிஷயமாகத் தோன்றலாம், அகில உலக அரசியல் கட்சியெனச் சொல்லிக் கொள்வோருக்கு. ஆனால் வாழ்ந்த மாபின் வழிவந்தோருக்கு — புது வாழ்வுபெற முயல்வோருக்கு — இதுவும் ஒரு பிரச்னைதான். அதனாலேயே திராவிடக் கழகத்தலைவர் பெரியார் அவர்கள் கடந்த ஆக. 1ம் தேதி அந்த 'இந்தி' எழுத்துக்களை அழித்தார் — பல இடங்களில் கழகத் தோழர்கள் அப்பணியில் ஈடுபட்டார்கள். அதேநேரத்தில்தேசிய நண்பர்கள் அடிக்கப்பட்ட தாரினை மண்ணெண்ணெய்கொண்டு, அழிக்க முயன்றதாகவும் அறிகிறோம். திராவிடக் கழகத்தோழர்கள் கொட்டிய தாரினை, மண்ணெண்ணெய்கொண்டு அழிப்பது சுலபமாக இருந்திருக்கலாம்—தேசிய நண்பர்களுக்கு.

ஆனால், வடவர், 'ஆதிபத்ய' எனும் தார்கொண்டு தென்னாட்டு மக்களின் முகத்திலும் அகத்திலும்

பூசிவருகிறார்களே, அதனை அழிக்க, ஆக 1-ந்தேதி, தேசிய நண்பர்கள் கொண்டுசென்றார்களே மண்ணெண்ணெய் அதுபோல, 'காலன்—காலனா'க, ஊற்றினாலும், முடியாது.

அந்தக் கேட்டினை உணர்த்துவதுதான், ஆக 1—இந்தி அழிப்புக் கிளர்ச்சியின், நோக்கம்.

'அவர்கள் அழித்தெழுதிச் சென்றார்கள். ஆகா! பார்த்தீர்களா? அதைத் துடைத்துவிட்டு, மீண்டும் இந்தியால் எழுதிவிட்டோம்'' என்று, அரசாங்கத்தினரும், பெருமைப்பட்டுக்கொள்ளலாம் — அதனைப் பிரசுரித்து, 'பிளாக்'போட்டு, தேசிய ஏடுகள், தெருக்கிறுவும், பாடலாம்.

அழிப்பதும்—அதனைக் கலைத்துவிட்டு பிறகு, எழுதுவதுமல்ல, கவனிக்கவேண்டியவை. அழித்ததைக்கலைத்து, புதிதாகக்கூட எழுத முடியாதளவுக்கு, எந்த அரசாங்கமும், வசதியோ, வலிவோ அற்றதாக இருக்கமுடியாது. அப்படியிருந்தால், அது அரசாங்கமல்ல— ஆண்டிமடம்! ஆகவே, அதில் 'கித்தாப்பு' பேசுவது, கேலிக்குரியதாகும்.

ஆனால், ஒரு அரசாங்கம் செய்த ஒரு காரியத்தை, மக்களில் ஒரு பகுதியினர் விரும்பவில்லை—அழிக்கின்றனர், என்பதையே கவனிக்க வேண்டும்.

"எதற்காக நாங்கள் கவனிக்க வேண்டும்?'' என்று காங்கிரஸ் வேகம் கொண்ட சிலர், கனல்மேனி எழலாம். அவர்கள் கவனித்தாலும் கவனிக்க மறுத்தாலும், உலகம் பார்த்துக்கொண்டுதானிருக்கும்! அதன் கண்களை — காங்கிரசார் மட்டுமல்ல, எவராலும் மறைக்க முடியாது.

பெரியார் அவர்களின் மேற்படி கிளர்ச்சியில், கடந்த ஆண்டினைப் போல் நாம், கலந்துகொள்ளவில்லை— இந்த ஆண்டு. காரணம், நாம் வேறு வேலையிலீடுபட்டிருப்பதை, அவரும் அறிவார்—நாடும் அறியும்.

இந்தி போர்டுகளை அழித்தநேரத்தில், நாம் வடநாட்டு ஆதிக்கச் சின்னத்தை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தோம்—இருக்கிறோம்.

டால்மியாபுரம், எனும் பெயர், வடநாட்டுப் பீடம் எந்தளவுக்கு வளர்ந்து வாகைசூடி வருகிறதென்பதற்கோர்—எடுத்துக்காட்டு. 'கல்லக்குடி' மண்ணை, காசாக்குகிறார், டால்மியா! காலில் முள் குத்தினாலும், ஆலையின் சக்கரம் ஆளைப்பலி கொண்டாலும், நம்மனோர், அந்த டால்மியாவின் ஆலைக்குள், அனுதினமும் உழைத்து உருக்குலைந்துபோய்க் கொண்டிருக்கிறார்கள். மண்—அவர்களுடையது! மண்வெட்டியும், இரும்புப் பாறையும்கொண்டு, எடுத்துத் தருவதும் அவர்கள்!—இன்பம் அனுபவிப்பதோ, டால்மியா.

ஒருவன் கொழுக்கப் பலர் வாடவுமான, இந்நிலை, நீடிப்பதற்குக் காரணம், உழைத்து உலரும் மக்களின் சொந்த ஆட்சியில்லை, இந்நாட்டில். 'டில்லி'யிலிருக்கும் சர்க்கார், இந்தத் தென்னாடு முழுமையும், ஆளுகிறது. தன்னுடைய சகாக்களாம் டால்மியா—டாடா—பிர்லா, போன்றோர், தமது அகண்ட கரங்களை நீட்டி, பொருளினைத் திரட்டிச் செல்லும் வாய்ப்பினை, அளிக்கிறது. அகண்ட பாரதம்! — அந்த முயற்சியை மறைக்கும், மோகனத்திரை.

இத்திரையைக் கிழித்தெறிந்து, தென்னாட்டு மக்களுக்கு, அவர்தம் சொந்த பூமியை, உரிமையாக்குவதுதான், 'திராவிட நாடு திராவிடருக்கே' எனும் இலட்சியம்.

அந்த இலட்சியத்தை நாம் ஏந்தி நிற்கிறோம் — எடுத்துச் சொல்கிறோம். ஏற்க மறுக்கிறது—டில்லி. இறுமாப்போடு பார்க்கிறது. 'இப்படி ஒரு உரிமைக்குரல் எழும்புவதாகச் சொல்லிக்கொள்வதே- ஆபத்து' எனக் கருதுகிறது. பிரச்சாரப் போர்வையால், பிரச்னையை மூட முயல்கிறது.

எத்தனின் போக்கு கண்டு ஏங்குமுன், அவனின் அட்டகாசம், நமது வாழ்க்கைத் துறையெங்கும் பரவி வருவதைக் காண்கிறோம்.

'கல்லக்குடி'யின் பொருள் சுரண்டப்படுவதுமட்டுமின்றி, அந்த ஊரின் பெயரும், மாற்றப்பட்டுவிட்டது.

உடலில் குத்திக் கொடுமைப் படுத்துவோர், ஒரு கண்ணையும் அவிக்க முனைவதைப்போல், நம் சொத்தைச் சுரண்டுவோர், நமது மானத்தையும் சூறையாடுகின்றனர்.

இதனை, எத்தனை நாட்களுக்குத்தான் தாங்கமுடியும்? எடுத்துரைத்தால், கேட்பாரில்லை! தீர்மானம் அனுப்பினால், அலட்சியம் காட்டப்படுகிறது! அதனால்தான், அறப்போரினைத் துவக்கினோம்.

அது கண்ட அரசாங்கம், அறப்போர்த் துவக்க நாளன்று பிணங்களைத் தந்தது, நமக்கு — இரத்தம் வழிந்தோடுவதைக் காட்டிற்று — சிறைக்குள், பூட்டிற்று.

இவைகளைக் கண்டதும், நமது அறப்போர் கலைந்துவிடும் என எண்ணியே, இவைகளைச் செய்தது.

எனினும். அறப்போர் வீரர்கள் விட்டாரில்லை—அன்று முதல் தொடர்ந்து, 'கல்லக்குடி' எனும் பெயர் எழுதப்பட்ட தாளினை ஒட்டியவண்ணம் இருக்கிறார்கள்.

'டால்மியாபுரம்', 'கல்லக்குடி' என மாற்றப்படும்வரை, இந்த அறப்போர், தொடர்ந்து நடைபெறும்.:

வீரர்கள், தினசரி சென்று, கல்லக்குடி எனும் பெயர் இருக்கிறதா எனப் பார்ப்பர் — இல்லையெனில் ஒட்டுவர் — கிழிந்திருந்தால் சீர்படுத்திவிட்டுத் திரும்புவர்.

தினசரி, சிறிது பசையும், ஒரு தாளும்தான், நமக்குத் தேவை.

ஆளவந்தாருக்கோ, ஆயுதம் தாங்கிய போலீசும், அடக்குமுறை 'பாரா'வும் தேவை.

தினசரி, நமக்குச் செலவாவது— சில நிமிடங்கள்.

அரசாங்கத்துக்குச் செலவாவதோ மானம். ஒவ்வோர் நாளும், நமது தோழர்கள் ஒட்டும் 'போஸ்டர்' டில்லி ஏதேச்சாதிகாரத்தின் முகத்தில் ஒட்டும் போஸ்டராகும்.

தினசரி நமது அறப்போர் வீரர்கள் தடவும், 'பசை' ரயில்வே போர்டில் அல்ல-டில்லிபீடத்தின், முகத்தில்.

இவ்விதம் ஒரு ஆட்சியின் போக்குகண்டு, மக்கள் மன்றம்

பிளவும்—நேருவும்!

பீகார் காங்கிரசில், இரு கோஷ்டிகளுக்கிடையே ஏற்பட்டுள்ள தகராறு, தாங்க முடியவில்லை. ஒற்றுமையுண்டுபண்ணச் செய்த முயற்சிகளெல்லாம் பலன்தராமற்போகவே, பண்டித நேரு மிக்க கவலைப் படுகிறாராம். பீகார் முதலமைச்சரை, டில்லிக்கு வருமாறு அழைத்திருக்கிறாராம்.

செயலில் ஈடுபடுவதும், அதனைக் கண்டும் காணாததுபோல் 'ஆசிய ஜோதி'யின் சர்க்கார் இருப்பதையும் கண்டு, உலகமே, கேலிசெய்கிறது.

'நியுயார்க் டைம்ஸ்' எனும் அமெரிக்க ஏடு, விளக்கமாகத் தீட்டியிருக்கிறது இதுபற்றி.

அனைத்திந்தியாவிலுமுள்ள ஏடுகள்யாவும், நமதுடைய கோரிக்கையின் வலிவை தெரிந்துகொண்டுள்ளன.

எட்டமுடியாததெனக் கருதப்பட்டஇடங்களுக்கெல்லாம், இன்று நம்முடைய இலட்சிய முழக்கம், கேட்கத் தலைப்பட்டிருக்கிறது இருட்டில் தள்ளப்பட்டு வரும், நமக்கு இதுவும் ஒரு வெற்றிதான்!

இந்த 'வெற்றிக்கு' காரணம் 25 நாட்களாக, டால்மியாபுரம் அறப்போரிலீடுபட்டுவரும், கழகவீரர்களே, காரணமாகும். அனுதினமும் படைவரிசைபோல் அணிவகுத்துச் சென்று, அமைதியான முறையில், 'டில்லி' ஆதிக்கத்துக்குப் 'புத்தி கற்பித்து'வரும், அத்தோழர்களின் உணர்ச்சியைப் பாராட்டுகிறோம்."

தோழர்காள்! உங்கள் பணி, எதிர்காலத்திராவிடத்தின் ஏடுகளில் பொறிக்கக்கூடியது. நீங்கள் ஓட்டுகிறீர்கள்! அகிலஉலகினும் புகழ்பெற்றதாகக்கூறப்படும் நேருசர்க்காரால் அதனைக்கிழிக்க முடியவில்லை!! மக்களின்குரல்-மமதையாளரின் கண்களைத்திறந்திருக்கிறது. தொடர்ந்து அறப்போரினைச் செய்வோம்-அது, அவர்கள் கருத்தினைத் திறந்து வைத்து, 'கல்லக்குடி' எனும் பெயரினை மாற்றும் வரையில், செய்வோம்-அமைதியும், கண்ணியமும், குன்றாமல்.

மக்கள் குரல்—வெல்லும்!
மமதை ஆட்சி—அடிபணியும்!!

மு. கருணாநிதி

திருச்சி சிறையில் வாடும் தோழர் கருணாநிதி அவர்களின் குடும்பத்தினர், சென்னையிலிருந்து திருவாரூருக்குச் சென்றுவிட்டனர்.

அவரது சென்னை முகவரிக்கு அனுப்பப்பட்டுவந்த இயக்க ஏடுகளையெல்லாம், "மு. கருணாநிதி, தெற்கு வீதி, திருவாரூர்" எனும் முகவரிக்கு அனுப்புமாறு, கருணாநிதியின் அன்னையார், கேட்டுக்கொள்கிறார்கள்.

ஐவர் வழக்கு

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை, துணைச்செயலாளர்கள் நெடுஞ்செழியன், மதியழகன், செயற்குழுஉறுப்பினர்கள் சம்பத், நடராசன், ஆகியோர்மீது ஆட்சியாளர் துவங்கியிருக்கும் வழக்கு கடந்த 3-ந்தேதி துவங்கிற்று—5-ம் தேதியும் நடைபெற்றது. 10-ந்தேதி ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. சென்னை பிரதம மாகாண மாஜிஸ்டிரேட் திரு. எம். ஏ. வேங்கட்டரமணநாயுடு அவர்கள் முன்னிலையில் நடைபெறும் இவ்வழக்கில், சர்க்கார் தரப்பில் திரு. அத்னேஷியஸ், வாதாடுகிறார்.

நமது சார்பில் திரு. என். ஏ. நாராயணசாமி பி. ஏ. பி. எல் வழக்கைக் கவனிக்கிறார்.

சாட்சிகள்

1. சென்னை இரகசிய இலாகா உதவி கமிஷனர் திரு. குழந்தைவேலு.

2. சுருக்கெழுத்து போலீஸ் இன்ஸ்பெக்டர் திரு. கோபால்ராவ்.

3. சுருக்கெழுத்து சப்-இன்ஸ்பெக்டர் திரு. ஜகராஜ்.

4 திருச்சி டெபுடி போலீஸ் சூபரின்டெண்ட் திரு. பத்மநாப அய்யர்.

5. தூத்துக்குடி டெபுடிபோலீஸ் சூபரின்டெண்ட் திரு.எம் குழந்தை.

6. ரயில்வே போலீஸ் இன்ஸ்பெக்டர் திரு. சந்தானகிருஷ்ணன்.

7. வண்ணாரப்பேட்டைபோலீஸ் இன்ஸ்பெக்டர் திம்ஸ்.

8. சைதாப்பேட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர் திரு. சுந்தரம்அய்யர்.

ஆகியோர் சர்க்கார்தரப்பு சாட்சிகளாக விசாரிக்கப்பட்டனர்.

திங்களன்று மேலும் இரண்டு சாட்சிகள்விசாரிக்கப்படலாமெனத் தெரிகிறது.

வழக்கில் சம்பந்தப் பட்டிருக்கும், ஐவரும், தனித்தனியாக, குற்றச் சாட்டுகளை மறுத்து கோர்ட்டில் அறிக்கைகள் படிக்கலாம்.

மக்கள் ஆர்வம்

ஒவ்வோர் நாளும், நீதிமன்றத்துக்கு வெளியில் ஏராளமான மக்கள், வழக்கின் முடிவை எதிர்பார்த்துக் கூடியிருக்கின்றனர். நீதிமன்றத்துக்கு உள்ளும், வெளியும் ஏராளமான போலீசார் நிறுத்தப்பட்டிருக்கின்றனர்.

தினசரி கழக முக்கியஸ்தர்களும், எம். எல். ஏக்களான தோழர்கள் ஏ. கோவிந்தசாமி, எஸ். தெய்வசிகாமணி ஆகியோரும் நடவடிக்கைகளைக் கவனிக்கின்றனர். வழக்கின் முதல் நாள் திருப்பத்தூர் வக்கீல் தோழர் ஜி. சாமி பி. ஏ., பி. எல்., சென்னை வக்கீல் கோகுலகிருஷ்ணன் ஆகியோர், வந்திருந்தனர்.

★

சவுண்டப்பன்

குமாரபாளையம் (பவானி) சேர்ந்த இவர், கடந்த 18-ந் தேதியன்று, தியாகராயநகரில் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டு, மூர்ச்சையாகிக்கிடந்தார். கைவிரல்கள் கிழிந்து போய் விட்டன—மண்டை உடைந்து போய்விட்டது — கை எலும்பு முறிந்து போய் விட்டது — அவ்வளவு மோசமாக, 'ஆச்சாரியாரின்' அம்புகள் அவரைத் தடி கொண்டு தாக்கின—தோழர், மறியலில் ஈடுபடச்சென்றவர். சென்னையில், கைத்தறித் துணிக்கடையொன்றின் உரிமையாளர், ஆவார். அவரைத் தாக்கியது மட்டுமின்றி, பிரேதம் போல் கிடந்த அவரை, தூக்கவுமில்லை, போலீஸ் அதிகாரிகள்.

இதனை, 'ஐவர் வழக்கு' விசாரணையின் போது சாட்சியமளித்த சுந்தரம் எனும் போலீஸ் அதிகாரி, ஒப்புக்கொண்டார்.

அடிபட்டவருக்கு சிகிச்சை வழங்காதது மட்டுமின்றி, ராயப்பேட்டை ஆஸ்பத்திரிப் படுக்கையில், கிடக்கும் போது சென்று, அவரை, போலீஸ் அதிகாரி, கைது செய்திருக்கிறார்.

தோழர் சவுண்டப்பனைக் காணும் போது, பகீரென்கிறது! அவ்வளவு அடி!! ஐயோ, ராமராஜ்யமே — இதற்கா பெயர், சுயராஜ்யம்?

✱

காக்கை உட்கார...

'காக்கை உட்கார பனம்பழம் விழுந்தது' என்ற ஒரு பழமொழி நம் நாட்டிலே உண்டு.

காக்கை உட்கார்ந்து, பனம்பழம் விழுந்துவிடாது. பனம்பழம் உதிரப் போகும் நேரத்திலே, காக்கை அதன்மீது உட்கார்ந்தால், காக்கையாலேயே பனம்பழம் விழுந்தது என முடிவு கட்டிக் கூறுவது பேதமையாகும்.

கோயிலுக்குச் சென்று, குருக்களுக்குத் தட்சிணை தந்துவிட்டு, கும்பிட்டுவிட்டு வெளியில் வரும் நேரத்திலே, பழைய பாக்கிக்காரன் ஒருவன் பணம் கொடுப்பதும், கோர்ட்டில் நடைபெற்றிருந்த, தன் வியாஜ்ஜியம் வெற்றி அடைந்துவிட்டது என்று கேள்விப்படுவதும் ஆகிய காரியங்கள் நடைபெறுவது ஆண்டவனால் அல்ல, அது காக்கை உட்கார பனம்பழம் விழுந்த கதை போன்றதாகும் என நாம் எடுத்துக் கூறினால், நாத்திகப் பட்டம் சூட்டி நம்மை நிந்திக்கும் தோழர்கள், மிகப் பலர்.

அவர்களுக்கு அண்மையில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை நினைவூட்ட விரும்புகிறோம்.

விழுப்புரத்துக்கு அடுத்துள்ள வைத்தீஸ்வரன் கோயிலில், ஒரு குருட்டுப் பெண் சுவாமி தரிசனம் செய்துக் கொண்டிருந்த பொழுது கண் பார்வை தெரிந்ததாக ஒரு செய்தி வெளிவந்தது.

அது, ஆண்டவனின் அதி அற்புதத்தால் நேர்ந்துவிட்டது என்று ஆத்திக அன்பர்கள் அகங்குளிர்ந்து, அந்த வைத்தீஸ்வரப் பெருமானின் புகழினைப் போற்றாமல் இருந்திருக்க மாட்டார்கள்.

அவர்கள் அந்த ஆண்டவனின் அற்புதச் செயலை பாடி முடிக்கு முன்னரே அது ஆண்டவனின் செயலால் ஏற்பட்டதல்ல. மருத்துவரின் மருந்தால் தீர்ந்தது என்ற உண்மை வெளிவந்துவிட்டது.

நல்ல கண் பார்வை பெற்றிருந்த 17 வயதுள்ள அந்த இளம் பெண்ணுக்கு, சில தினங்களுக்கு முன்பாக ஒருநாள் கண் இமைகள் திறக்கமுடியாமல் போய்விட்டதாயும், ஒரு டாக்டரிடம் காண்பித்ததில், இரண்டு நாட்களுக்கு மருந்து விட்டால், வியாதி நீங்கி இமைகள் திறந்துவிடுமென்று கூறியதாகும் தெரியவருகிறது.

இதற்குள், வேறு விஷயமாக பெண் வைதீஸ்வரன் கோயிலுக்குப் போக, இமைகள் தானாகத்திறந்து இப்பொழுது பழைய மாதிரி பார்வை இருக்கிறது.

இதை ஒரு அதிசயமாக ஆத்திக நண்பர்கள் கருதினார்கள். இதில யாதொரு அதிசயமுமில்லை என்று மருத்துவரும் மக்களும் கூறுகிறார்கள்.

இப்படித்தான் சில சமயங்களில் ஏதாவது ஒன்று இயற்கையாகவே நடைபெறுகிறது. அது ஆண்டவனால் நடைபெற்றது. என்று போற்றிப் புகழ்கிறார்கள்—பக்த சிரோன்மணிகள்.

சகுனங்களுக்கும், சாத்திரங்களுக்கும், ஜோசியங்களுக்கும் இப்படித்தான் நம் நாட்டிலே மதிப்பு ஏற்பட்டுவிட்டது.

காக்கை உட்கார பனம்பழம் விழுந்ததைப்போன்ற இப்படிப்பட்ட சில சம்பவங்களை வைத்து, மூட நம்பிக்கையில் நம் மக்கள் மூழ்கிக் கிடக்கிறார்கள். இக்கட்டுக் கதைகளை விட்டுத் தள்ளும் காலம் என்று நம் நாட்டில் வருகிறதோ, அன்றுதான் இந்நாட்டு மக்கள் இன்பமாய் வாழமுடியும்.

இன்பமாய் வாழ்வதுமட்டுமல்ல, எத்தர்களின் எடுபிடிகளாய், ஏமாளிகளாய் ஆகாமல் இருக்கமுடியும்.

★

நேரு, தவிக்கிறார்!

"லஞ்ச ஊழல் தாங்கமுடியவில்லை!

இதுவா, காங்கிரசாட்சி?—என்று மக்கள் கேட்கின்றனர்.

மானம் பறிபோகிறது! — இந்த வெட்கங்கெட்ட மந்திரிசபை நீடிக்கும்போது, நாங்கள் எம். எல். ஏக்களாக இருந்து என்ன பயன்?

பழியும் தூற்றலும் எங்களையன்றோ, சாரும்? வேண்டாம் இந்த விபத்து!"

✱

இவ்விதம், ஐதராபாத்தைச் சேர்ந்த 20 எம். எல். ஏ.க்கள் காங்கிரஸ் தலைவர் பண்டித நேருவுக்குக் கடிதம் தீட்டியுள்ளனர்.

அதில், தாங்கள் சட்டசபை உறுப்பினர் பதவியிலிருந்து விலக விரும்புவதாகவும் தெரிவித்திருந்தனர்.

இந்த அவமானத்தைக் கண்ட நேரு, ஐதராபாத் உள்நாட்டு மந்திரி பிந்துவை டில்லிக்கு அழைத்துள்ளார்.

ஐதராபாத் காங்கிரஸ் தலைவர் ராமானந்த தீர்த்தரும், டில்லிக்கு வந்துள்ளார்.

சிக்கலான நிலை!—நேரு, தவிக்கிறார்!!

✱

மக்கள் தீர்ப்பு

அலைகடலென, இலட்சக்கணக்கில், திரண்டிருந்த மக்கள், அளித்த தீர்ப்பு இது. கடந்த 2ந் தேதி, சென்னைக் கடற்கரையில்கண்டோம் இக்காட்சியை! திரண்டிருந்த மக்களைப்பார்த்து, 'நீதிபதிகளே, நீங்கள் தீர்ப்புச் சொல்லுங்கள்' என்று கூறி தி. மு. க. பொதுச்செயலாளர் அண்ணாதுரை, கீழ்க்கண்ட கேள்விகளைக் கேட்டார். அதற்கு மக்கள், தந்த பதில்:-

அ:- நான் பலாத்காரத்தைத் தூண்டினேனா?

மக்:- இல்லை!

அ:- நான் பார்ப்பனர் இல்லங்களில் கொள்ளையிடச் சொன்னேனா?

மக்:- இல்லை! இல்லை!!

அ:- மக்களைத்தூண்டி களவாடச் சொன்னேனா?

ம:- இல்லை, இல்லை!

அ:- அமைதிக்குறைவான செயலுக்கு அனுமதி அளித்ததுண்டா?

மக்:- இல்லை! இல்லை!!

✱

'சிறைச்சாலை—புதுப் பலம் தரும்'

'கோபமூட்டினால் அக்கிரமம் சகஜமே'

ஆச்சாரியார் அறிவுரைகள்

இன்றல்ல - 1921-ல்

[இன்று, ஆயிரக்கணக்கானோரை அரசியல் காரணமாக, சிறைக்குள்ளே பூட்டி, சித்ரவதை செய்கிறார் ஆச்சாரியார். அவர் 1921-ல், வேலூர் சிறையிலிருந்தபோது, எழுதிய குறிப்புகள், இவை. முன்பு வெளிவந்து நின்றுபோன, 'வெள்ளிமணி' எனும் இதழில் 'சிறையில் தவம்' எனும் தலைப்பில், தொடர்ந்து வெளிவந்த கட்டுரைகளிலிருந்து, எடுக்கப்பட்டன சுதந்திரப்போராட்ட வீரர் கூறுகிறார்!!]

டிச 27:- நமக்கும் சுதந்திரத்துக்கும் இடையில் நிற்கும் இடையூறுகள் சிறைபயம், மரணபயம் என்னும் இரண்டே. எங்களைப் போல் அநேக மக்கள் இங்குவந்துவிட்டால் அப்புறம் சிறைபயம் அறவே ஒழிந்துபோகும். என்னிடம் அன்பு கொண்டவர்கள் எல்லோரும் சிறைக்கு வெளியே இருக்கிறார்கள். பிரிந்திருக்க நேரிட்டிருப்பதன் காரணமாக என்னிடம் அவர்கள் முன்னிலும் அதிகமாக அன்பு கொண்டிருக்கிறார்கள்.

*

டிச 29:- சிறைக்குச் செல்வது தேசபக்தர்கள் செய்யும் காரியம் என்று எண்ணிமட்டும் சிறைக்குச் செல்வதால், நன்மை உண்டாகாது. அடிமை நாட்டில் சிறைக்கு வெளியே இருப்பதால் உண்டாகும் மனவேதனையின் காரணமாகச் சிறைக்குச் சென்றால்தான் சிறைவாயில்மூலம் சுதந்திரத்தைப் பெற முடியும். அநியாயத்தோடு ஒத்துழைப்பதையும், அடிமைத்தனத்தால் ஏற்படும் மானபங்கத்தையும் இனிப் பொறுக்கமுடியாது—இதைவிட சிறை வாழ்வே இன்பமானது—அங்கு சென்றால் அநியாயத்துடன் ஒத்துழைக்கவேண்டிய அவசியமில்லை. அநியாயத்துடன் ஒத்துழைக்கும் பாவத்தைச் செய்வதைவிட, சிறையில் ஏற்படும் துன்பங்களையும் தொல்லைகளையும் அனுபவிப்பதே மேலானது என்று ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் எண்ணுவார்களானால், அதுதான் உண்மையான தியாகம். அது பலனளிக்காமற் போகாது. அதனால் உடனடியாக எந்தவிதமான நன்மையும் தேசத்துக்கு உண்டாகாவிட்டாலும் தேசத்தை அடிமையாக வைத்திருக்கும் அநியாயத்துடன் ஒத்துழைக்கும் பாவத்தைச் செய்யவில்லை என்ற பரமதிருப்தி ஒவ்வொருவருக்கும் உண்டாகும்.

துன்பத்தை ஏற்பதன் மூலம் அநியாயத்தை நீக்க முடியும் என்ற கொள்கையிடம் நமக்கு நம்பிக்கையிருக்குமானால், நாம் வேற்றியடைந்தே, தீருவோம். அநியாயத்தை எதிர்ப்பதற்கு அறிகுறியாகவே சிறை செல்கிறோம். சிறையில் எவ்வளவுக்கெவ்வளவு கஷ்டப்படுகிறோமோ, எவ்வளவுக்கெவ்வளவு கொடுமைப் படுத்தப்படுகிறோமோ, எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக வெளியுலகத் தொடர்பு நமக்கு அறுபடுகின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு நாம் அழிக்க விரும்பும் அநியாயத்தினின்றும் விலகுகிறோம்; அவ்வளவுக்கவ்வளவு நம் தியாகம் அந்த லட்சியத்தை அடைவதற்குப் பயன்படும். மேனாட்டில், அநேக தியாகிகள் சுதந்திரத்துக்காகவும், மதத்துக்காகவும் சிறை சென்றிருக்கிறார்கள். இருட்டறைகளில் அடைபட்டிருக்கிறார்கள். சொல்லொணா சித்திரவதைகளை அனுபவித்திருக்கிறார்கள்......ஆயினும் அந்தப் பெரியோர்களிடம் காணப்பட்ட மன உறுதியும், தியாக புத்தியிலும் ஆயிரத்தில் ஒரு பங்குகூட இன்னும் நம்மிடம் காணப்படவில்லை

*

பிப் 1:- எங்கேயோ ஓர் இடத்தில் ஒரு கூட்டம் நடந்ததாகவும், அந்தக் கூட்டத்தின்மீது போலீசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்து கலைத்ததாகவும், அதன் காரணமாக ஆறுபேர், கொல்லப்பட்டதாகவும், முப்பதுபேர் காயப்பட்டதாகவும் ஒரு சேதியைக்கேள்விப்படுகிறேன்

*

பிப் 17:- இடைவிடாமல் பிரசாரம் செய்தால் பொது ஜனங்களை அகிம்சை முறையைக் கையாளும்படி பழக்கிவிடலாம் என்று காந்தியடிகள் கருதுவதை என்னால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை இந்தமாதிரி எத்தனையோ முறை அவர் எழுதி வருகிறார் ஆனாலும் கோபமூட்டக்கூடிய காரியம் நிகழ்ந்தவுடன் ஜனங்கள் தலை கால் தெரியாமல் அக்கிரமச்செயல்களில் இறங்கிவிடுகிறார்கள்.

*

மார்ச் 2:- எது எப்படியாயினும் அரசியல் கைதிகளாகிய நாங்கள் செய்யக்கூடியது ஒன்றுதான். துன்பத்தை ஏற்றுக் கொள்ளுதல் என்னும் கொள்கையில் நம்பிக்கை உடையவராயிப்பதுதான் அது. நல்ல பண்பாடு பெற்றுள்ள மக்கள் ஆயிரக்கணக்கானவர்கள் துன்பத்தை அனுபவிக்க முன்வந்து சிறையில் எவ்வித இன்னலையும் மனமுவந்து அனுபவித்து வருவதன் மூலம் நம்முடைய தேசம் விசேஷமான பலமே பெற்றிருக்கின்றது. அவர்களுக்கே, சகலபுகழும் உரியதாகுக. அத்தகையோர் பலருடன் சிறையில்வாழும் பாக்கியத்தை நான் பெற்றிருக்கிறேன்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சிக்கு வருவதற்கு 50 ஆண்டுகளுக்கு முன்னர் அவரால் யோசிக்கப்பட்ட பழம் பெருந்திட்டமாம் இது. அதாவது, அவர் சிறு பையனாக இருந்த காலத்தில் இந்தத் திட்டத்தைத் தயாரித்துக், காலம் வரும்வரை காத்திருந்தாராம், காலத்தின் கோலம், அவரைக் கொல்லைப்புற வழியாக வந்து கோலோச்சும்படி செய்துவிட்டது. அந்தச் சந்தர்ப்பத்தை அவர் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு, ஐம்பது ஆண்டுகள் வயதான அந்தத் திட்டத்தை, சிறுபிள்ளைத்தனமான அந்தத் திட்டத்தை, புத்துலகத்தின் ஆரம்பகாலத்தில் அமுலாக்கப்பார்க்கிறார். அதற்காகப் புத்துலகச் சிற்பிகளாம் இன்றைய பொதுமக்கள் அனைவரையுமே அலட்சியமாக எண்ணுகிறார். தம்மைத் தவிரத் தரணியில் தக்கார் எவரும் இல்லை என்ற தருக்கோடு காரியங்களைச் செய்து கொண்டு போகிறார். இந்த நிலையில், மக்கள் பிரச்னைகளுக்கு முக்யத்வம் கொடுத்து அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் கட்டாயத்தில் இருக்கும் எங்களின் வேண்டுகோளை, மக்களின் நல்வாழ்வுக்கு நல்ல தீர்ப்புக் கூறும் நிலையில் உள்ள நீங்கள் ஏற்க மறுத்தால், இன்றைய ஜனநாயக ஆட்சி முறை, நடுவர்களாகிய உங்களையும் ஆட்டிப்படைக்கிறதோ என்ற ஐயம் எங்களுக்கு உண்டாகாதென்று நீங்கள் எப்படி எதிர்பார்க்கமுடியும்?"

*

"பொதுமக்களின் பிரதிநிதிகளான 139 எம். எல். ஏ.க்களின் பெரும்பான்மை ஆதரவோடு நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தையும், அதன் பின்னர், அது குறித்துச் சர்க்கார் தரப்பில் வெளிவந்திருக்கும் அபிப்பிராயங்களையும் நாங்கள் கவனிக்காமல் இருந்தால்தானே நீங்கள் எங்கள்மீது குற்றஞ்சாட்ட முடியும். நாங்கள் இரண்டு முடிவுகளையும் ஊன்றிக் கவனித்து, அவற்றின் எதிர்கால முடிவு 'இன்ன விதத்தில்தான் இருக்கும்' என்பதை யூகத்தின்பேரில் ஓரளவுக்குத் தெரிந்துகொண்டதாலேயே, மேற்படி திட்டம் குறித்த பரிசீலனை எங்கள் பார்வைக்கு ஒருவேளை வாராதோ என்று கருதினோம். பெரும்பான்மை எம். எல். ஏ.க்களின் வாக்குரிமைகளோடு நிறைவேற்றப்பட்ட, மக்களின் அடிப்படை உரிமைத் தீர்மானத்தையே "வெறும் சிபார்சுதான்" என்று அலட்சியமாகக் கூறும் போக்கை இன்றைய ஜனநாயக சர்க்கார் மேற்கொண்டிருப்பதாலேயே, எங்கள் பார்வைக்கு இத்திட்டம் கொண்டுவரப்படமாட்டாதென்று கருதினோம். அதிலும், திட்டம் அமுல் நடத்தப்படுவதை நிறுத்திவைத்து எங்கள் பரிசீலனைக்குவிட்டு, எங்கள் முடிவு இன்னதென்று தெரிந்தபின்னரே, அத்திட்டம்பற்றிய முடிவைச் சர்க்கார் செய்ய முற்படவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றிய பின்னரும், அத்திட்டத்தை அமுல் நடத்திக்கொண்டே, அதை எங்கள் பரிசீலனைக்கு விடப் போவதாகக் கூறும் ஒரு ஏதேச்சாதிகார. மன்னிக்கவும், ஜனநாயக சர்க்காரிடம், அத்திட்டம் எங்கள் பார்வைக்கு அனுப்பப்படும் என்றும், அப்படி அனுப்பப்பட்டாலும், அது, எங்கள் தீர்ப்போடு தான் அமுல் நடத்தப்படும் என்று நீங்கள் எந்தத் தைரியத்தின் மேல் எங்களை இவ்வளவு தொலைவு கேட்டுக் கொள்கிறீர்கள் என்பது தான் எங்களால் புரிந்து கொள்ள முடியாத புதிராக இருக்கிறது. எனவே தான், இந்தத் தர்மசங்கடமான நிலையிலிருந்து எங்களுக்கு விடுதலை அளித்த ஆச்சாரியாரே! உமக்கு எங்கள் வணக்கம் என்று கூறினோம். என்றபோதிலும், சர்க்காருக்கு நல்ல பேரும், பொது மக்களுக்கு நன்மையும் உண்டாக வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடுள்ள எங்களிடம், அத்திட்டம், ஒருவேளை, பரிசீலனைக்கு வந்தால், நாங்கள், அது குறித்த எங்கள் நல்ல தீர்ப்பை யாருக்கும் சஞ்சலமோ சந்தேகமோ ஏற்படாத முறையில், பாரபட்சமற்று நடுநின்று வழங்குவோம் என்பதை உறுதியாகக் கூறுகிறோம்."

*

இப்படி ஒரு உரையாடல், இப்போது கொண்டுவரப்பட்டிருக்கும் புது ஆரம்பக் கல்வித்திட்டம்பற்றி, எம். எல். ஏ.க்களுக்கும், கல்வி நிபுணர்களுக்கும் இடையே நடைபெற்றதென்றால், அதில், அதிசயமோ ஆச்சரியமோ ஏற்படக் காரணம் இல்லை. ஏனென்றால், மேற்படி கல்வித் திட்டத்தை நிறுத்தி வைக்கும்படி கொண்டு வரப்பட்ட தீர்மானத்துக்குப் பின்னர், சர்க்கார் தரப்பில் வெளியிடப் பட்டிருக்கும் அறிக்கைகளும் பிறவும், அத் தீர்மானத்தை ஒப்புக் கொண்டு, அதன்படி நடக்கச் சர்க்கார், அல்ல, அல்ல, ஆச்சாரியார் விரும்பவில்லை என்றே தெரிகிறது. அதனால்தான், ஆரம்பித்து நடத்தப்படும் கல்வித் திட்டத்தை நடுவில் நிறுத்தி வைப்பது முறையல்லவென்று முகாரி பாடுகிறார். விஷயமறியாதவர்கள் ஆச்சாரியார் கூறுவதில் அர்த்தமிருக்கிறதென்றுதான் கருதுவார்கள். ஆனால், இத்திட்டத்தை ஆரம்பித்து எவ்வளவு காலமாகிவிட்டது? இப்போது அதனை நிறுத்தினால் எவ்வளவு ஆபத்து நேரிடும்? எத்தனை ஆயிரம் ரூபாய் நஷ்டமாகும்? என்பனவற்றை அவர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை

புதிய திட்டத்தை ஆரம்பித்து இரண்டே மாதங்கள்தான் ஆகின்றன. இந்த இரண்டு மாதங்களில், மாணவர்கள், தங்களுக்குத் தேவையான புத்தகங்களை வாங்குவதற்கும் முதலில் கட்டவேண்டிய சம்பளத் தொகையைப் பெற்றோர்களிடமிருந்து கிடைக்கும் வசதியைக் காணுவதற்கும் ஒருமாத காலத்துக்குமேல் தேவைப்படுகிறதென்ற உண்மை, ஊரை ஆள்பவர்களுக்குத் தெரியாவிட்டாலும், உலகம் தெரிந்திருக்கும் ஒரு அனுபவமாகும். நம் நாட்டில், பெற்றோர்கள் பலர், தங்கள் பிள்ளைகளுக்கு வேண்டிய புத்தகங்களையும் சம்பளத்தையும் தேடிக்கொடுக்கும் சக்தியற்றவர்கள் என்பது, ஆயிரக் கணக்கில் சம்பளம் வாங்கும் ஜனநாயக சர்க்கார் அதிகாரிகளுக்கு (மந்திரிகளுக்கு) எப்படித் தெரியும்? பொது மக்கள், தங்களிடமுள்ள பொருளிற் பெரும் பகுதியைச் சர்க்காருக்கு வரியாகக் கொட்டியழுது விட்டுத், தங்கள் குழந்தைகளைப் படிக்க வைக்கவும் முடியாத நிலையில் இருக்கின்றனர் என்பது, பலரின் பாடுபட்ட வருவாய் ஒரு சிலரின் டம்பாச்சாரி

"திராவிட நாடு"
டெலிபோன் வசதி
கிடைத்துவிட்டது.
எண்—15

வாழ்வுக்கேயாம்'' என்ற திட்டத்தோடு நாட்டை ஆளும் ஜனநாயக சர்க்காருக்கு எப்படித் தெரியும்?

ஜனநாயகத்தின் சின்னங்கள், துப்பாக்கி, குண்டாந்தடி, கண்ணீர்ப்புகை, 144, என்று சொல்லப்படும் 'அன்பு மலர்கள்' தான் என்ற முறையில் ஆட்சி புரிவோருக்கு ஆலோசனை கூறுவோர் அவசியமில்லை. எனவேதான், இப்படிப்பட்ட ஜனநாயக ஆட்சியில், 'எங்களுக்கு விடுதலை' என்று நிபுணர்கள் கூறினால், அதில் என்ன தவறு காண முடியும் என்று கேட்கிறோம்.

இக் கல்வித் திட்டத்தை, அமுல் நடத்திக் கொண்டே, நாளடைவில் நிபுணர் பரிசீலனைக்கு விடுவதாக் கூறுவது வெறும் கண் துடைப்பு வேலை என்று நாம் கூற வேண்டிய நிலையை, அது குறித்து ஆச்சாரியார் வெளியிட்டிருக்கும் அறிக்கை உண்டாக்கி விட்டது. முதல் நாள், திட்டத்தை நிறுத்தி வைத்து நிபுணர் கமிட்டிக்கு விட வேண்டுமென்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஒப்புக் கொள்வது போல் பாசாங்கு செய்த ராஜகோவிந்தாச்சாரியார், மறுநாள், 'திட்டத்தை நிறுத்தி வைக்க மாட்டேன்' என்று திமிரோடு அறிக்கை வெளியிடுகிறார் என்றால், அதன் பொருள்தான், நிபுணர் கமிட்டிக்கு விடுவது என்று கருதுகிறீர்களா? மற்றவர்கள் பதில் கூற வேண்டாம். ஜனநாயகத்தின் தூதுவர்களே! மந்திரிகளை மன்னர்களாக்கிய மாவீரர்களே! சர்க்காரின் சகபாடிகளே! அருமைக் காங்கிரஸ் நண்பர்களே! நீங்கள், உங்கள் நெஞ்சில் கை வைத்து நேர்மையான பதில் கூறுங்கள்.

★

வருந்துகிறோம்

நம் இயக்கத் தோழர்களில் ஒருவரான, காஞ்சி எஸ். வி. கன்னியப்பன் அவர்களின் வாழ்க்கைத் துணைவி சொர்ணம்மாள், 24-7-53ல் இயற்கை அடைந்தார் என்ற செய்தி கேட்டு, மிக வருந்துகிறோம். துணைவியை இழந்து வாடும் தோழருக்கும், அவர்தம் மழலைமொழிக் குழவிகட்கும், உறவினர்கட்கும், நம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்

பேராசிரியரும் ஆலோசகரும்

"கல்விச் சீர்திருத்தம் பற்றி ஆரம்பத்திலேயே சென்னை ராஜ்ய சட்ட சபையினரையும், கல்வித் துறை நிபுணர்களையும் கலந்தாலோசித்திருந்தால் நல்லதாக இருந்திருக்கும்''

இந்தக் கருத்தை, இப்பொழுது ஆச்சாரியாரால் கொண்டு வரப்பட்டிருக்கும் ஆரம்பக் கல்வித் திட்டத்தைக் குறித்துப் பேசுகையில் வெளியிட்டிருக்கிறார் ஒருவர். யார் இவர்? பாம்பும் சாகாமல் தடியும் ஒடியாமல் பேசியவர் யார்? யாரோ ஒரு காங்கிரஸ் அனுதாபி, தவறு, தவறு, காங்கிரஸ்காரர்கள் பலர் இத் திட்டத்தை எதிர்க்கிறார்கள். எனவே, யாரோ ஆச்சாரியாரின் அந்தரங்க நண்பர்களில், நிதியமைச்சர் தோழர் சுப்பிரமணியம் போன்ற ஒருவர் தான் இவ்விதம் கூறியிருக்க வேண்டுமென்று நினைப்பீர்கள். இவ்விதம் கூறியவர் சாதாரண காங்கிரசைக் காக்கா பிடித்து வாழ வேண்டியவர்களின் பட்டியலில் சேர்க்கப்படக் கூடிய ஒருவரல்ல. பொறுப்புவாய்ந்த பதவியிலிருப்பவர் மட்டுமல்ல, கல்வித் துறையில் 20 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவம் பெற்றுப் பேராசிரியர் என்ற சிறந்த அடை மொழிக்கு இலக்காகி நிற்கும் ஒருவர் தான் இவ்விதம் கூறியுள்ளார். இப்படிப்பட்ட ஒருவர் கூறியதைச் சாதாரணமாகக் கருதிவிட முடியாது; 'பாம்பும் சாகாமல் தடியும் ஒடியாமல்' என்ற பழமொழிக்கு ஒப்பிட்டுப் பேசி அலட்சியப் படுத்தி விடவும் முடியாது. அவர் மேலும் கூறுகிறார்,

> "தொழில்களைச் செய்து கொண்டே கல்வி கற்கும் கொள்கையைத் தான் ஆதாரக் கல்வி மூலம் பரப்ப காந்திஜி முற்பட்டார். சென்னைத் திட்டத்தை ஆதாரக் கல்வி என்று சொல்ல முடியாது''

என்பதாக! ஆச்சாரியாரால் கொண்டு வரப்பட்டிருக்கும் கல்வித் திட்டம், காந்தியாரால் ஆரம்பிக்கப் பட்டுத் தோல்வியடைந்த ஆதாரக் கல்வித் திட்டத்தோடு கூட ஒப்பிட முடியாத மிக மோசமான திட்டமென்பதை மனதில் வைத்துக் கொண்டு, அவர் பொறுப்பு வாய்ந்த பதவியில், அதுவும், ஆச்சாரியாரின் கட்சியின் பொதுக்காரியதரிசியாக இருப்பதை மனதில் வைத்துக் கொண்டு, வெளியே துப்பவும் முடியாமல் — உள்ளே விழுங்கவும் முடியாமல், இவ்விதம் பேசியிருக்கிறார். என்ற போதிலும், அவர், இத்திட்டத்தை முழுமனதுடன் ஆதரிக்கவில்லை என்பது, அவரால் கூறப்பட்ட இரண்டு வாசகங்களையும் ஊன்றிக் கவனிக்கும் எவருக்கும் நன்கு புலப்படும்.

அகில இந்தியகாங்கிரஸ் பொதுக் காரியதரிசியான பேராசிரியர் தோழர் அகர்வாலா அவர்களே, நாம் மேலே தந்துள்ள இரண்டு வாசகங்களையும் உள்ளடக்கிய ஒரு அறிக்கையை 1—8—53ல் டில்லியிலிருந்து வெளியிட்டிருக்கிறார். அவர்மேலும் தம்முடைய அறிக்கையில், தாம் சென்னைக்கு வந்திருந்தபோது, இத்திட்டம் குறித்து ஆச்சாரியாருடன் நீண்ட நேரம் விவாதித்ததாகவும், அத்திட்டம் கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் பொருந்தக்கூடியமுறையில் அமையவில்லை என்றும், அப்படி அமையும்படி அத்திட்டத்தை உருவாக்கும்படி யோசனை கூறியதாகவும் குறிப்பிட்டுள்ளார். இதனை, "ராஜாஜியின் கல்வித்திட்டத்துக்கு அகர்வாலாவின் ஆதரவு'' என்ற மகுடமிட்டு, மக்களை ஏமாற்றப் பார்க்கும் ஏடுகள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

பேராசிரியர் அகர்வாலா அவர்கள் தம்முடைய கல்வித்துறை அனுபவத்தைப்பற்றி அவ்வறிக்கையில் குறிப்பிடும்பொழுது,

> "இந்தியக் கல்வி முன்னேற்றத்தில் கடந்த 20 ஆண்டுகளாக நான் தீவிர பங்கு கொண்டிருக்கிறேன். ஆகவே, இவ்விஷயமாகப் பேச எனக்கு உரிமை உண்டு''

என்பதாக வெளியிட்டிருக்கிறார். தமக்கு உரிமை இருக்கிறது என்

பதை முன் கூட்டி அறிவித்து விட்டே தம்முடைய கருத்தை வெளியிட்டிருக்கிறார் என்றால், அதிலும் காங்கிரஸ் கட்சியின் முழுப் பொறுப்பையும் நிர்வகித்து வரும் ஒருவர், காங்கிரஸ்சர்க்காரின் பேரால் கொண்டுவரப்பட்டிருக்கும் ஒரு திட்டத்தை ஒரே மூச்சில் ஆதரிப்பதைவிட்டு, சுற்றிவளைத்துப் பூசி—மெழுகி—மெருகிட்டு — மினுக்கிக் காட்ட முயன்றும், முடியாமல், அத்திட்டத்தின் அடிப்படையில் இருக்கும் கோளாறுகளை விளக்கி அறிக்கை வெளியிட வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகிவிட்டார் என்றால், இத்திட்டம் எந்த அளவுக்கு உருப்படாததென்பதை மேலும் விளக்கத் தேவையில்லை. பேராசிரியர் அகர்வாலாவாவது வடநாட்டவர். எனவே, அவருக்குத் தென்னாட்டுக் கல்வி முறையைப் பற்றி என்ன தெரியும் என்று வாளா இருந்துவிடலாம் என்று ஒப்புக்கு வைத்துக்கொள்வோம்.

இதோ! சென்னை மாநிலக் கல்வி ஆலோசகர்—ஆச்சாரியாரின் கல்வித் திட்டத்தை ஆரம்ப காலமுதல் ஆதரித்து வருபவர்களில் முதலிடம் வகிப்பவர்—தோழர் இராமச்சந்திரன் அவர்கள் பேசுகிறார்.

"இத்திட்டம் இறுதியானதல்ல.

புதிய திட்டம்

அமுல் நடத்துவதில் கஷ்டங்கள் ஏற்படும்.

ஏற்பட்டால் தீர்க்கவேண்டும்.

கடந்த இரு மாதத்தில்கூட சில குறைபாடுகள் காணப்பட்டன."

என்று. 2—8—53-ல் செங்கற்பட்டில் நடைபெற்ற ஆரம்ப ஆசிரியர்கள் கூட்டத்தில் இவ்விதம் பேசியுள்ளார்.

இரண்டு மாதகாலம் இத்திட்டத்தை அமுல் நடத்திப்பார்த்த பின்னர், சென்னை மாநிலக் கல்வித் துறையின் ஆலோசகர் கூறுகிறார், அதில், சில குறைபாடுகள் இருப்பதாக.

குறைபாடுகள் காணப்படும் ஒரு திட்டத்தை ஏன் அமுல் நடத்த வேண்டுமென்றுதானே. பொதுமக்களின் பிரதிநிதிகளான 139 எம். எல். ஏ-க்கள் அத்திட்டத்தை நிறுத்திவைக்கும்படி சட்ட பூர்வமான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளனர். இதன் பின்னரும் இத்திட்டம் குறித்து ஆதரவுக் கூட்டங்கள் நடத்தவும், எங்கோ மூலையில் இருக்கும் ஊர்பேர் தெரியாதவர்களை எல்லாம் இதுபற்றிக் கவைக்குதவாக் காரணங்களைக் காட்டிக் கட்டுரைகள் எழுதும்படி செய்து பத்திரிகைகளில் வெளியிடுவதும் ஏன் என்று கேட்கிறோம்.

அகில இந்திய காங்கிரஸ் பொதுக் காரியதரிசியோ, இது சட்டசபை உறுப்பினர்களின் சம்மதத்தோடு கொண்டுவரப்படவேண்டிய ஒரு திட்டமென்கிறார். சென்னை மாநிலக் கல்வி ஆலோசகரோ, இதனை இரண்டுமாதகாலம் அமுல் நடத்திப் பார்த்தும் பல குறைபாடுகள் காணப்படுகின்றன என்கிறார். ஒருவர் பேராசிரியர். இன்னொருவர் கல்வித்துறைக்கே ஆலோசகர். இவர்களின் வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுக்க மறுக்கிறார் இந்த மறையவர் என்பதை ஆச்சாரியார் திட்டத்துக்கு ஆசிகூறி வரவேற்கும் அப்பாவிகள் ஏன் எண்ணிப்பார்க்கக் கூடாதென்று கேட்கிறோம்.

அவர்கள் பாதை!

"திராவிட முன்னேற்றக் கழகம்"

இந்தப் பெயர், ஏழையுலகின் உள்ளத்தில், அன்பைச் சுரக்கச் செய்கிறது. நாடு, தி.மு.க. தோழர்களின் கண்ணியத்துக்கும்நேர்மைக்கும் மதிப்பளிக்கிறது.

பிறந்து நான்காண்டுகளே ஆயிற்றென்றாலும், அதற்குள் நாட்டில் அது வளர்ந்திருக்கும், அரசியல் நேர்மையினை, மாற்றாரும் மறக்கார்.

தன்னுடைய தலையில் சர்க்கார் அடித்ததையும் தாங்கிக்கொண்டது — போலீஸ் படையும் குதிரைப் பட்டாளமும் சென்னை வீதிகளில், பலமுறை நமது தோழர்களை, மண்ணிலே வீழ்த்தியதுண்டு. 'குன்றத்தூர்' கண்டோம்—'நாரணமங்கலம்' அனுபவித்தோம் – எழுத்துரிமை, பேச்சுரிமை, இதற்காகப் பலபேர் சிறைக்கூடம் சென்றனர்.

தி. மு. க. பிறந்த சூழ்நிலையே, விரோதிகளுக்கு மத்தியில்தான்! அச்சத்தோடு பார்த்தோரும், அவமதிப்பால் அழித்திடலாம் என எண்ணியோரும் ஆர்ப்பரிப்பால் சாதிக்கலாம் என எண்ணியோரும் ஏராளம்.

அத்தனை பேருடைய 'ஆசி'யையும் பெறுமளவுக்கு இன்று, தி. மு. க. வளர்ந்திருக்கிறது. காரணம், அரசியல் வாழ்வில் கண்ணியமும் நேர்மையும், ஏற்படவேண்டுமென்ற அதனுடைய முக்கியவழியேயாகும்.

தவறு ஏற்பட்டபோது, கண்டிக்கத்தயங்கியதில்லை! நன்மைகளைக் காங்கிரஸ் சர்க்கார் செய்தபோது, பாராட்டி—ஒத்துழைக்கப் பின்வாங்கியதில்லை!! இருந்தும், இந்நாட்டு 'ஏடுகள்' தி. மு. க.வை மிக மிக அலட்சியம் செய்தன — அப்படியொரு கழகம், இருப்பதாகவே, அங்கீகரிக்க, மறுத்தன.

ஏடேந்தியவர்களாக விளங்கும், பார்ப்பனத் தலைவர்களோ, சந்தர்ப்பம் ஏற்படும்போதெல்லாம் இழித்தும் பழித்தும், எவ்வளவு குற்றச்சாட்டுகளை வீசமுடியுமோ, அவையனைத்தையும் வீசியும், நம்மை அழிக்க நினைத்தனர்.

அழிக்க நினைத்தவர், வகை, பலரகம்.

எனினும், அத்தனை 'ரகங்களை'யும், தன்னுடைய சகோதரர்களாகவே, கழகம், பாவித்தது.

பார்ப்பனத் தலைவர்கள், துவேஷப் பரம்பரையைச் சிருஷ்டிக்கும் முயற்சியிலிருந்தார்கள்,

"ஐயனே, ஆபத்து. அவ்வழி செல்லாதீர்—திராவிடத்தில் வாழும் எல்லோரும் திராவிடராக விளங்கட்டும். இந்தியநாடு என்று கூறி, அங்கு வாழ்வோரெல்லாம் இந்தியர்என்று சொல்லுகிறீர்கள்—ஏற்காது அது. ஆனால் திராவிட மண்ணில் வாழும் பெரும்பாலான மக்களின் நாகரீகப் பண்புகளோடு கலந்துவிடுங்கள் — பேதமற்ற சமுதாயத்தை நாம் சிருஷ்டிப்போம்" — என்று பார்ப்பனவாலிபர்களுக்கு, தி. மு. க.

அறைகூவல் விடுத்தது. எங்கே? என்போர், இருக்கலாம். மூன்றாண்டுகளுக்குமுன் சென்னையில் கூடிய மாவட்ட தி. மு. க. முதல் மாநாட்டுத் தலைவரின் பேச்சையும், தீர்மானங்களையும், நமது பழைய பிரதிகளைத் தேடிப் பார்த்தால், விளங்கும்.

துவேஷப்பாதையல்ல, இது! — என்று கண்ட காரணத்தால், மேற்படி வாலிபர்கள் பலர், நமது கழக ஆக்கவேலைகளில் பங்கு கொள்ளத் தயங்கவில்லை. சென்னைச் சிறையில் கிடக்கும் நமது தோழர்களைச் சென்று பார்த்தால், தி. மு. க. இலட்சிய வெற்றிக்காக அறப்போரில் ஈடுபட்டு, சிறைத்தண்டனை பெற்றுக்கிடக்கும் பார்ப்பன இளைஞர்களைக் காணலாம்.

மனிதன் மனிதனாக—ஒரு கூட்டுக் குடும்பமாக—வாழும், திட்டம் கொண்டது, தி. மு. க.

மனமாச்சரியங்கள் குறையவேண்டும்—

மனிதாபிமானம் வளரவேண்டும்.

இது தி. மு. க. வின் முழக்கமாகும். இந்த மனிதாபிமான உணர்ச்சியால் தான், ஆச்சாரியார் கைத்தறியாளர் குறித்து ஆதரவு திரட்டப்படவேண்டுமெனக் கோரிய காலத்தில், துணி சுமந்து வீதி வீதியாக விற்றோம்—இந்தப் பணியினைக் கேலி செய்தன, நம்மொத்த, முன்னணிக் கட்சிகள்; தாங்கிக் கொண்டோம்.

தஞ்சைப் புயல் கண்டு, 'டில்லி' உதவி செய்யாமல் வாளாஇருப்பது கண்டும், 'சர்க்காருடைய வேலை தானே, இது! நமக்கென்ன?' என்று நாம் இருக்கவில்லை. தோழர் கருணாநிதியைத் தலைவராகக் கொண்ட நிதிக்குழுவை அமைத்து, ரூ 30,000 திரட்டிக் கொடுத்தோம்.

காங்கிரசாருக்கு மனவேதனையேற்பட்ட நேரங்களில் — வெந்த புண்ணுக்கு மருந்து தடவும் வேலையைச் செய்தோமேதவிர — 'பார்! பார்!! செத்துவிட்டார், அத்தலைவர் அவர் ஒரு வடநாட்டுக்காரர். ஆகவே, வீடுகள் தோறும், இனிப்பு அருந்தி, இன்பவிழாக் கொண்டாடுங்கள்', என்று கூறியதில்லை. காந்தியார் இறந்தபோது, நாமும் கலங்கினோம்! பட்டேல், மறைந்தபோது, 'ஒரு பொன் ஏடு — முடிந்தது' என்று, தீட்டியது, நாம் தான். அவர்கள் வடவர்கள் என்பதற்காக, அவர்கள் ஒரு நாட்டின் விடுதலைக்காகப் போராடியதை மறைக்கும் சிறுமதிக்குறியோராகியதில்லை, நாம். வடநாட்டுக்காரர் என்றாலே, எவரைப் பார்த்தாலும் ஏசு, வீசு கத்தியை, என்ற விபரீதப்பாதை புகுந்ததும் கிடையாது.

மனிதாபிமானம் — ஒரு பக்கம், நம் இதயத்தில் இருந்துகொண்டே வருவது.

மாற்றாராயினும் அவருக்கு ஏற்பட்ட அதிர்ச்சிகண்டு—அகமகிழும் சிறுமதியாளர்கள், அல்ல, நாம்.

சேலத்தில், 22-கம்யூனிஸ்டுத் தோழர்கள், காங்கிரசாட்சியின் துப்பாக்கிப் பிரயோகத்துக்குப் படுகொலையானார்கள்—

நாடு முழுமையும் கண்டனக் கூட்டங்கள் நடத்தினோம், நாம். கம்யூனிஸ்டுக் கைதிகள், ஜெயிலில் எப்படியெப்படி நடந்துகொள்ள வேண்டும் — எந்தெந்த வழிகளில் அவைகளை மீறினார்கள்—என்று, பத்திரிகையில் 'கலம்' பிரித்து, காட்டவில்லை, நாம். புத்திமதிகள் கூறிக்கொண்டிருக்கவில்லை — நமக்கும் அக்கட்சிக்குள்ள பேதாபேதங்களை விளக்கிக்கொண்டிருக்கவில்லை. இறந்த உயிர்கள், எதேச்சாதிகாரம் ஆகியவைகளே நம் கண்முன் நின்றன—கட்சிப்பூசல், அல்ல.

கம்யூனிஸ்டுத் தோழர்கள், விசாரணையின்றிச் சிறையிலேபூட்டிவைக்கப்பட்டுக் கிடந்த நேரத்தில், "கம்யூனிஸ்டுகள், செய்தது பலாத்காரமா? இல்லையா? அந்த முறைகள், எவ்விதம், பொதுவுடைமையை இந்த நாட்டுக்குக் கொண்டுவரும்?' என்று விவாதங்கள் நடத்தவில்லை. "விசாரணை அல்லது விடுதலை!"—என்றே முழக்கமிட்டோம்.

காரணம், மனிதாபிமானம்—அவர்களும், இந்நாட்டிலே பிறந்தவர்கள் — நம்முடைய சகோதரர்கள் என்பதால்.

இந்தளவுக்குக் கண்ணியமும் நேர்மையும் காட்டிவந்தோம்—பார்ப்பனராயினும் சரி, காங்கிரசாயினும் சரி, கம்யூனிஸ்டுக் கட்சியாயினும் சரி—

இந்தக் கண்ணியத்தின் அளவை, பார்ப்பனத் தலைவர்கள் ஏற்க மனம் ஒப்பார் — ஏனெனில் நம்போன்றோர் இந்த உலகில் இருப்பதே அநாகரிகம், என்று கருதும் மார்க்க சீலர்கள் அவர்கள்.

காங்கிரஸ் தலைவர்களில் சிலரைத் தவிர பலர் — உள்ளத்தில் உணர்ந்தாலும், வெளியிட விரும்பார். "எங்கே—நாம் வளர்ந்துவிடுமோமோ?" எனும் அச்சம், அவர்களுக்கு.

இதனால்தான், குண்டுகள் தாங்கி, பிணங்களைப் புதைத்துவிட்டு, சிறைச்சாலைகளில் குடும்பங்களைத் துறந்துவிட்டு குவிந்துகிடக்கும் தோழர்களை எண்ணி, நாம் இரத்தக்கண்ணீர் சிந்திக்கொண்டிருக்கும் நேரத்திலும், 'இந்து' போன்ற ஏடுகள், நம்மீது பழிவீச முயல்கின்றன.

காங்கிரஸ் தலைவர்களும் இறந்தோருக்கு அனுதாபம் தெரிவிப்பதும், சிறையில் மூடுவதைக் கண்டிப்பதும் கட்சிக் கட்டுப்பாட்டுக்கு உகந்ததல்லவென்று கருதினர்.

அவர்கள் அவ்விதம்தான் இருப்பர்! அவர்களிடமிருந்து, அனுதாபம்—நமக்குக் கிடைக்காது. அறிந்ததே.

ஆனால், 'இந்து' இதழ், எதிர்க்கட்சித் தலைவர் எம். எல். ஏ. இராமமூர்த்தியின் பேச்சைக் குறிப்பிட்டு 'புதுக்கிராமம்' குறித்து, தலையங்கம் தீட்டிய மறுநாள், நமது கம்யூனிஸ்ட்டுக்கட்சி, ஒரு அறிக்கையொன்று, 'நமக்காக' தயாரித்து, பிரசுரித்திருக்கிறது.

கண்டோம்; பரிதாபப்பட்டோம்.

அதனை வலியுறுத்தி நண்பர் ஜீவா, கட்டுரையொன்றும் தீட்டியிருக்கிறார்.

கண்டோம்; பெருமூச்சு விட்டோம்.

அரசியல் வாழ்வில், நண்பனையும் துணைவனையும்கூடப்புரிந்துகொள்ள முடியாத கருமேகம்! ஐயோ, அது எவ்வளவு ஆபத்து!! அந்தக் கருமேகம், மனிதாபிமானத்தையுமா, சாகடிப்பது?

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.